# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,905—1970 මැයි 8 වැනි සිකුරාදා—1970.5.8

14,905 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு மே மாதம் 8 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யப்படுவதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் | 391 | ஏலவிற்பனையும், குத்தகை விற்பனையும் | 412 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 399 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 407 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | — | ஏல விற்பனைகள் | 413 |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | 412 | நானாவித அறிவித்தல்கள் | — |


### பதவிகள் — வெற்றிடம்

" இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக் குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு ' நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் ' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விளம்பரதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 14 ந் தி.

எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அச்சகர்.

---

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க.ப.த.ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சி சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

*5. வேண்டிய தகைமைகள்.*— விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.

*6. யுத்தசேவைச் சலுகை.*—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

*7. பிற தேவைகள்.*—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.*—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

No. A. 79/X.2162/69

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பதிப்பாசிரியர் பதவிகள்—கனிட்ட பல்கலைக் கழகக் கல்லூரிகள்

1970 ஆம் ஆண்டு எப்றில் 17 ஆந் திகதிய 14,902 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி—பகுதி I, தொகுதி II இல் பிரசுரிக்கப்பட்ட மேற்கூறிய பதவிகள் சம்பந்தமான அறிவித்தலுக்கு உமது கவனம் கோரப்படுகிறது.

மேற்சொல்லப்பட்ட விளம்பரத்தில் 4 ஆவது பந்தியில் (ஆ) பிரிவில் குறிக்கப்பட்ட தகைமைகள் பின்வருமாறு மாற்றஞ் செய்யப்பட்டுள்ளன :—

இரசாயனவியலை உடனடியாகத் தொடர்ந்து தாவரவியல் சேர்க்கப்பட்டிருககின்றது.

விண்ணப்பத்தின் முடிவுத் திகதி பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது :—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் 1970.5.22.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 1970.5.29.

டி. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
காலிமுகச் செயலகம்,
த. பெ. இல. 500,
கொழும்பு 1,
30.4.1970.

5–111/1—8.5 70 ந் திகதிய வர்த்தமானி இல 14,905

No. AA 19/X. 2238/70

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### இலங்கைத் தொழில்நுட்பவியல் கல்லூரி, கட்டுபெத்த மின்சார, எந்திரவியல் விரிவுரையாளர், II ஆந் தர பதவி

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள இலங்கைத் தொழில்நுட்பவியல் கல்லூரியிலுள்ள மின்சார எந்திரவியல் விரிவுரையாளர், II ஆந் தர பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, " செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 " என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள்—22.5.1970.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—29.5.1970.

**குறிப்புகள்.**— (i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணபபங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைகுள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் கைம்பெண் அனாதை இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு கட்டணம் செலுத்த வேண்டும். நியமதாரி முதற்கண் 3 வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. **சம்பளமும் சகாயப் படிகளும்.**—இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூ. 6,720 — 360 — 11,040 வருடாந்தம்.

**குறிப்பு.**— (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழக எந்திரவியல் பட்டதாரிகள் அல்லது விஞ்ஞான முதுமானி அல்லது கலாநிதி போன்ற அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் தகைமைகள் பெற்றுள்ளவர்கள் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூ. 7,800 பெறுதற்கு உரித்துடையராவர்.

(ii) ஒரு பல்கலைக் கழகத்தில் அல்லது சமமான மட்டத்தில் மூன்று வருட கற்பித்தல் அனுபவம் பெற்றுள்ள பட்டதாரிகள் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூ. 7,800 அளிக்கப்படுதற்குத் திறைசேரியின் அனுமதியுடன் சீர் தூக்கப்படுவார்கள். ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர் ஒருவர் தெரிவு செயயப்படுமிடத்து, 13.6.59 ஆந் திகதிய 432 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தால் திருத்தப்பட்டதற்கமைய 25.2.57 ஆந் திகதிய 531 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்துக்கிணங்க அவருடைய சம்பளம் தீர்மானிக்கப்படும்.

(iii) லண்டன் குடிசார் எந்திரவியலாளர் நிறுவன, மின்சார எந்திரவியலாளர் நிறுவன, பொறிமுறை எந்திரவியலாளர் நிறுவன கூட்டுறுப்பினர் தகைமை போன்ற பூரண உயர்தொழில் தகைமைகள் பெற்றுள்ள அபேட்சகர் ஒருவர் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூ. 9,960 பெறுதற்கு உரித்துடையராவர்.

அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழக எந்திரவியல் பட்டதாரிகளாகவுள்ள II ஆந் தர விரிவுரையாளர்கள் தமது சம்பள அளவுத் திட்டத்தின் உச்சிப்படியை—அதாவது வருடாந்தச் சம்பளம் ரூ. 11,040 ஐ—அடைந்ததும் அச்சம்பளப் படியில் ஒரு வருடம் பூர்த்தி செயதபின் வருடாந்த உயர்ச்சிப்பணமாக ரூ. 480 பெற்று வருடாந்தம் ரூ. 13,440 என்ற சம்பளப் படிவரை சம்பளம் பெறுதற்கு உரித்துடையராவர்.

4. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளுடையவரெனத் திருப்தியான முறையில் நிரூபிக்க வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1970.5.22 ஆந் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (இவ் வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு அமையாது).

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் எந்திரவியல் விஞ்ஞானமானிப் பட்டம், மின்சார எந்திரவியல் பாடங்களுடன் பெற்றிருக்க வேண்டும்.
அல்லது

(ii) மின்சார எந்திரவியலாளர் நிறுவன கூட்டுறுப்பினர் தகைமைப் பரீட்சையின் I ஆம், II ஆம், III ஆம் பகுதிகளில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.
அல்லது

(iii) சமமான அல்லது உயர்ந்த தமைகைகள் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) சிங்களத்தில் கற்பிக்கக்கூடிய ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். அல்லது இந்நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங்களத்தில் வேண்டிய தகைமையைப் பெறவேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்கள்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமைபற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விணணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்பவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத் தப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண் டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத் தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலி ருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித் தலைப் பெறாவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1.
1970.4.30.

5–111/4—8.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

சபையின் சேவையில் IV ஆம் தர உதவிச் சட்ட உத்தியோகத்தர் பதவிகட் கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

2. **சம்பள அளவுத் திட்டம் :** மாதாந்தம் (எல்லாமுட்பட). ரூ. 700—5 × ரூ. 40, 6 × ரூ. 50—ரூ. 1,200.

3. **தகைமைகள்**
   (i) ஆகக் குறைந்தது 4 வருட அனுபவமுடைய வழக்குரைஞர் களாக (அப்புக்காத்து) அல்லது ஆகக் குறைந்தது 5 வருட அனுபவமுடைய வழக்கறிஞர்களாக (பிறக்கிராசி) இருக்க வேண்டும். 2.5.1970 ஆம் தேதியன்று இவர்கள் 35 வயதுக்குக் குறைந்தவர்களாகவிருக்கவேண்டும்.
   (ii) சிங்களத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் கூடுதலான தகைமை யாகவிருக்கும்.

4. **சேவை நிபந்தனைகள்.**—தெரிவு செய்யப்பட்டபரீட்சார்த்திகள் முதலில் 3 வருட தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவார்கள். அவர்கள்—
   (i) நியமனத்திற்கு முன்பு உடலுறுதியுள்ளவர்கள் என்று வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி சித்தியெய்த வேண்டும்.
   (ii) ஏற்கனவே இயற்றப்பட்டுள்ளதும், இனிமேல் இயற்றப்படக் கூடியதுமான சபையின் விதிகளுக்கும் பிரமாணங்களும் இயைய நடத்தல் வேண்டும்.
   (iii) தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில் அரசாங்க மொழிக் கொள்கையை நடைமுறையிற் கொண்டுவருவதற் குச் சபையால் விதிக்கப்பட்ட தராதர அளவிற்குச் சிங்கள மொழியிற் தேர்ச்சிபெறவேண்டும்.
   (iv) தங்களது சம்பளத்தில் 10 சத விகிதத்தைச் சபையின் சேமலாப நிதிக்குச் செலுத்தவேண்டும். சபை 15 சத விகிதத்தைச் செலுத்தும்.
   (v) இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவையாற்ற வேண்டும்.

5. கீழ்கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, 1970 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதியன்று அல்லது முன்னதாக, கொழும்பு 5, நாராகேன்பிட்டி, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஆளணி முகாமையாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.

200, கிருல வீதி, நாராகேன்பிட்டி,
கொழும்பு 5, 25 ஏப்ரல், 1970.

ஆளணி முகாமையாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை

### இலங்கைப் போக்குவரத்துச் சபை—மாதிரிப் படிவம்

1. விண்ணப்பிக்கப்படும் பதவி : ————.
2. பரீட்சார்த்தியின் முழுப்பெயர் : ————.
3. தபால் முகவரி : ————.
4. பிறந்த திகதி (பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று—மூலப் பிரதியல்ல—இணைக்கப்பட வேண்டும்) : ————.
5. 2.5.1970 திகதியன்று சரியான வயது :——வரு.——மா.——நா.
6. நீர் இலங்கைப் பிரசையானது வம்சாவழியர்கவா அல்லது பதிவு, மூலமாகவா ? : ————.
7. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? : ————. (விவாகம் செய்தவராயின் விவாகம் செய்த திகதியும் பிள்ளைகளின தொகையும் அவர்களின் வயதும்).
8. உயர்நிலைப் பாடசாலைக் கல்வி (படித்த பாடசாலைகள், சித்தியெய்திய பரீட்சைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக).
9. உயர் கல்வி (படித்த நிலையங்கள், சித்தியெய்திய பரீட்சைகள், உயர்தொழில் தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக. சான்றிதழ்களின் பிரதிகள்—(மூலப் பிரதிகள் அல்ல)—இணைக்கப் பட வேண்டும்) : ————.
10. தொழில்நுட்பத் தகைமைகள் (படித்த நிலையங்கள், சித்தியெய் திய பரீட்சைகள், உயர்தொழில் தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக. சான்றிதழ்களின் பிரதிகள்—(மூலப் பிரதிகள் அல்ல)—இணைக்கப்படவேண்டும்) :————.
11. தொழில் (பாடசாலை விட்டு விலகியபின் பார்த்த வேலைகளின் விபரம். அதாவது, பதவிப் பெயர், வேலைகொள்வோரின் பெயர், நியமனத் திகதி, விலகுவதற்கான காரணங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக) : ————.
12. அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையில் அல்லது வர்த்தக நிலையங்களில் நிறைவேற்று பதவிகளில் உயர் தொழில் பயிற்சி அல்லது அனுபவம் : (வகித்த பதவிகள், வேலையின் தன்மை, எல்லாம் உட்பட்ட சம்பளம் ஆகியவற்றைத் திகதி களுடன் குறிப்பிடுக) : ————.
13. விண்ணப்பிப்பதற்கு ஆதாரமான விசேட உரிமைகள் (இப்பதவிக்கு உங்கள் தகுதியை உயர்த்தக்கூடிய மேற்கூறிய எப் பதவியிலேனும் செய்த வேலையின் விவரங்களைச் சுருக்கமாகத் தருக) : ————.
14. சிங்களத்தில் எய்தியுள்ள ஆகக்கூடிய தராதரம் : ————.
15. இதற்கு முன்னர், இலங்கைப் போக்குவரத்துச்சபையில் ஏதாவது பதவிக்கு நீர் விண்ணப்பித்திரா ? விண்ணப்பித்திருப்பின் முடிவ கள் யாவை ? : ————.
16. வேறேதேனும் விபரங்கள் : ————.
17. சட்ட நீதிமன்றத்தில் கிறிமினல் குற்றங்கள் எதற்கேனும் குற்ற வாளியாகக் காணப்பட்டீரா :———— அங்ஙனமாயின் விவரங்கள் தருக : ————.
18. விண்ணப்பதாரர் பற்றிய தகவல்கள் பெறக்கூடிய இருவரது பெயர்களும் விலாசங்களும் : ————.
    (1)————. (2)————.

இவ் விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையெனவும், இதன்கண் தரப்பட்டுள்ள விடயங்கள் பிழையானவையாகவோ, சரியற்றவையாகவோ தெரிவிற்கு முன் காணப் பட்டால் தகுதியற்றவரென நீக்கப்படுவதற்கும், தெரிவிற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு இன்றி உத்தியோகத்திலிருந்து விலக்கப் படுவதற்கும் இடமுண்டு என்பதையும் நான் நன்கறிவேனெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
திகதி : ————. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

5–105/1—8.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### வெற்றிடங்கள்

சபையின் சேவையில் VIII ஆம் தரத்தில் கணக்குப் பதிவர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

**சம்பள அளவுத் திட்டம்.**—(எல்லாமுட்பட) மாதாந்தம். ரூ. 300—ரூ. 10—ரூ. 450. ரூ. 360க்கும் ரூ. 410 க்குமுன்பு வினைத்திறமைகாண் தடைகளுண்டு.

3. **தகைமைகள்.**—

(அ) வயது: இல் 25.5.1970 25 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியெய்தியிருக்கவேண்டும். எண்கணிதம்/தூயகணிதம்/வர்த்தக கணிதம் ஆகியவற்றுள் ஒரு பாடத்திலேனும் சித்தியெய்தியிருத்தல் விரும்பத்தக்கது. அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட தாபனமொன்றில் கணக்குப் பதியும் வேலையிலும் கணக்குப் பரிசோதனை செய்யும் வேலையிலும் 3 ஆண்டு அனுபவம் இருத்தல் வேண்டும்.

**அல்லது**

பின்வரும் ஏதாவதொரு பரீட்சையில் சித்தியெய்தியிருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட தாபனமொன்றில் கணக்குப் பதியும்/கணக்குப் பரிசோதனை செய்யும் வேலையில் ஆகக் குறைந்தது 3 ஆண்டு அனுபவமும் இருத்தல் வேண்டும்:—

(அ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் இறுதி வர்த்தகப் பரீட்சை ;

(ஆ) லண்டன் கணக்குப் பதிவர் நிலையத்தின் இறுதிப் பரீட்சை ;

(இ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி வர்த்தகப் பரீட்சையின் மூன்றும் ஆண்டுத் தகுதித் தேர்வுப் பத்திரப் பரீட்சை ;

(ஈ) வேறேதும் இதையொத்த தகைமைகள்.

4. இவ்விளம்பர நியதிகளின்படி தகைமையுடைய பரீட்சார்த்திகள், கணக்குப் பதிவியலிலும், வர்த்தக எண்கணிதத்திலும் ஓர் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றும்படி கேட்கப்படுவார்கள். இப்பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகள் ஒவ்வொருவரிடமும் ரூ. 10 கட்டணம், பரீட்சை மண்டபத்தில் அறவிடப்படும். தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்குப் பரீட்சை நடைபெறவிருக்கும் தேதி, நேரம், இடம் ஆகியன காலகதியில் அறிவிக்கப்படும்.

5. **வேலை நிபந்தனைகள்.**—உடலுறுதியுள்ளவர்களென்று வைத்தியப் பரீட்சையில் சித்தியெய்தினால், தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் முதலில் 3 வருடத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவார்கள். அத்துடன் அவர்கள்—

(அ) ஏற்கனவே இயற்றப்பட்டுள்ளதும் இனிமேல் இயற்றப்படக்கூடியதுமான சபையின் விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் இயைய நடத்தல் வேண்டும்.

(ஆ) தங்களுடைய தகுதிகாண் நிலைக்காலத்தில் சபையால் விதிக்கப்பட்ட தராதர அளவிற்குச் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறவேண்டும்.

(இ) வேண்டப்படும்போது இலங்கையின் எப்பகுதியிலேனும் சபையின் எப்பிரிவிலேனும் சேவையாற்ற வேண்டும்.

(ஈ) தங்களது சம்பளத்தில் 10 சதவிகிதத்தைச் சபையின் சேமலாப நிதிக்குச் செலுத்தவேண்டும். சபை 15 சதவிகிதத்தைச் செலுத்தும்.

கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, 1970 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் தேதியன்று அல்லது முன்னதாக, கொழும்பு 5, நாராகேன்பிட்டி, கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஆளணி முகாமையாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.

200, கிருல வீதி, ஆளணி முகாமையாளர்,
நாராகேன்பிட்டி, இலங்கைப் போக்குவரத்துச் சபை.
கொழும்பு 5, 1970 ம் ஆண்டு ஏப்ரல் மீ 20 ந் உ.

### மாதிரிப் படிவம்

**VIII ஆம் தர கணக்குப் பதிவர் பதவிக்கான விண்ணப்பம்**

1. (அ) முழுப் பெயர் :————.
(ஆ) தபால் முகவரி :————.
(இ) நிரந்தர தபால் முகவரி :————.

2. (அ) பிறந்த திகதி :————.
(ஆ) 25.5.1970 ஆம் தேதியன்று வயது. (பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று இணைக்கப்படவேண்டும். ஞானஸ்நானச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது):————.

3. கல்வித் தகைமைகள்
(அ) சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை :————.
(ஆ) சித்தியடைந்த பாடங்கள் :————.

4. திகதிகள், பாடங்கள் ஆகியவற்றுடன் சித்தியடைந்த கணக்குப் பதிவியல் பரீட்சைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :————.

5. பாடசாலையை விட்டு விலகியபின் பார்த்த வேலை

| வேலைகொள்வோர் | வகித்த பதவி | சேவைக் காலம் |
|---|---|---|
| | | |

6. கணக்குப் பதிவியல் அனுபவம் :————.

7. வேறேதேனும் தகைமைகள் :————.

8. இதற்கு முன்னர், இ. போ. ச. வில் ஏதாவது பதவிக்கு நீர் விண்ணப்பித்தீரா ? :————.
விண்ணப்பித்திருப்பின் முடிவுகள் யாவை ? :————.

9. சட்ட நீதிமன்றத்தில் கிறிமினல் குற்றங்கள் எதற்கேனும் குற்றவாளியாகக் காணப்பட்டீரா ? அங்ஙனமாயின் விவரங்கள் தருக :————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையெனவும், இதன்கண் தரப்பட்டுள்ள விடயங்கள் பிழையானவையாகவோ, சரியற்றவையாகவோ தெரிவிற்கு முன் காணப்பட்டால் தகுதியற்றவரென நீக்கப்படுவதற்கும், தெரிவிற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு இன்றி உத்தியோகத்திலிருந்து விலக்கப்படுவதற்கும் இடமுண்டு என்பதையும் நான் நன்கறிவேனெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

5–105/2—8.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905

---

## கட்டடங்கள் திணைக்களம்

### தொழினுட்ப உதவியாளர் பதவி (அமைப்புமுறை)

இத் திணைக்களத்திலுள்ள தொழினுட்ப உதவியாளர் (அமைப்புமுறை) பதவிக்கு இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே தரப்பட்டுள்ள படிவத்தில் நிரப்பப்பட்டு, கட்டடங்கள் பணிப்பாளர், கிளை “ எம் ஈ ”, கட்டடங்கள் திணைக்களம், த. பெ. இல. 504, கொழும்பு 1 என்ற முகவரிக்குப் பதிவு அஞ்சலில் 1970 ம் ஆண்டு, ஜுன் மாதம் 5 ம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் அவருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2. **வேதனம்.**—திரட்டிய சம்பள அளவுத் திட்டம் ஆண்டிற்கு ரூபா 5,016 ல் தொடங்கி 144 ரூபாவையும் 180 ரூபாவையும் கொண்ட ஆண்டு உயர்ச்சிகள் பெற்று ஆண்டிற்கு ரூபா 7,320 வரை செல்லும். ஆண்டிற்கு 7,320 ரூபாவைப் பெறுமிடத்து இரு ஆண்டுகள் சம்பள உயர்ச்சி நிறுத்தப்படும். பின்னர் ஆண்டிற்கு 7,500 ரூபாவிற்றொடங்கி 180 ரூபாவையும், 240 ரூபாவையும் கொண்ட ஆண்டு உயர்ச்சிகளைப் பெற்று ஆண்டுக்கு ரூபா 9,290 வரை செல்லும்.

3. **வயது.**—40 வயதிற்கு மேற்பட்டவராய் இருத்தலாகாது. (ஏற்கனவே அரசாங்க சேவையில் இருப்பவருக்கு இவ் வயது எல்லை பொருந்தாது.)

4. **நியமன நியதிகள் :**

(i) இப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்தைக் கொண்டதுமாகும். நியமனம் பெறுபவர்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை அளித்தல் வேண்டும் ;

(ii) குறுகிய கால அறிவித்தலில் நியமனப் பொறுப்பேற்க அவர்கள் வேண்டப்படுவர்.

**வேண்டிய தகைமைகள்.**—

(i) சிறந்த ஒழுக்கமும் உடல் நலமும் பெற்றிருத்தல் வேண்டும் ;

(ii) இரண்டிற்கு மேற்படாத தடவைகளில் சிங்கள/தமிழ் மொழி, கணிதம் (தூய அல்லது பிரயோக), பௌதிகம் என்பன உட்பட ஆறு பாடங்களில் கல்விப் பொதுச் சான்றிதழ் பரீட்சை (சாதாரண தரம்) அல்லது கணிதம் (தூய அல்லது பிரயோக) பௌதிகம் ஆகிய பாடங்களுடன் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சை அல்லது இதற்கு ஒத்த அல்லது உயர் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(iii) இலங்கைத் தொழினுட்பக் கல்லூரியில் கட்டட அமைப்பு படி I இலும் படி II இலும் சித்தியடைந்திருக்க வேண்டியதோடு இலங்கைத் தொழினுட்பக் கல்லூரியின் அமைப்பு முறை எந்திரவியலில் 3 ஆண்டு பகுதி நேரப் பயிற்சியினைப் பூர்த்தி செய்து அல்லது வேறு உயர் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(iv) குறைந்தது பத்து ஆண்டு அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும் ; இதில் குறைந்தது மூன்று ஆண்டுகளாவது படிவரைவு அலுவலக அனுபவமாக இருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பகாரர்கள் பின்வரும் சாதனங்களின் படிகளை (மூலங்கள் அல்ல) இணைத்தல் வேண்டும். :—

(i) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்காகிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ii) உயர் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(iii) பெறப்பட்ட தொழினுட்பத் தகைமைச் சான்றிதழ்கள் ;

(iv) முன்னை அனுபவத்தையும் நியமனங்களையும் குறிக்கும் சான்றிதழ்கள் ;

(v) அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட இரு குணவியல்புச் சான்றிதழ்கள். அரசாங்க சேவையில் ஏற்கனவே இருக்கும் வேட்பாளர்கள் இந்தத் துணைப் பிரிவின் கீழ் நற்சான்றிதழொன்றை அளிக்க வேண்டப்படமாட்டார்.)

7. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்கள் அவரவர் திணைக்களங்களின் தலைவர்களினூடாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விதித்த திகதிக்குப் பின்னர் இந்த அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள், விதித்த திகதிக்கு முன் விண்ணப்பகாரரின் திணைக்களத் தலைவரினால் பெற்றுக்கொள்ளப்பட்டு, சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரினால் தாமதத்திற்கான தகுந்த காரணம் காட்டப்பட்டு சிபாரிசு செய்யப்பட்டாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

8. இந்த வர்த்தமானியின் பகுதி I இன் பிரிவு (II) இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது.

9. விண்ணப்பங்கள் அல்லது அதன் தொடர்பான வேறு ஏதேனும் கடிதத் தொடர்புகள் பந்தி I இல் குறிப்பிட்டவாறன்றி, இந்தத் திணைக்களத்து உத்தியோகத்தர் எவருக்கேனும் நேரடியாக முகவரியிடப்படலாகாது.

ஜே. பி. வீரரத்ன,
கட்டடங்கள் பணிப்பாளருக்காக.

கட்டடங்கள் திணைக்களம்,
கொழும்பு,
1970 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 27 ந் உ.

## கட்டடங்கள் திணைக்களம்

### தொழினுட்ப உதவியாளர் (அமைப்புமுறை) பதவிக்கான விண்ணப்பம்

1. (i) பெயர் (முதலெழுத்துக்களுடன்) : ————.
   (ii) முழுப் பெயர் : ————.
   (தனித்தனி எழுத்துக்கள்)
2. அஞ்சல் முகவரி : ————.
3. (i) பிறந்த திகதியும் இடமும் : ————.
   (ii) ———— ஆம் ஆண்டு ———— ஆந் திகதியன்று வயது : ————. ஆண்டு : ———— மாதம் : ————.
4. நாட்டினம் : ————.
   (i) பரம்பரையாலா அல்லது பதிவாலா இலங்கைக் குடி : ————.
5. பிறந்த இடம் : ————.
   (i) விண்ணப்பகாரரின் தந்தை : ————.
   (ii) விண்ணப்பகாரரின் தந்தை வழிப் பேரன் : ————.
   (iii) விண்ணப்பகாரரின் தந்தை வழிப் பூட்டன் : ————.
6. தற்போது வகிக்கும் பதவி இருப்பின் : ————
   (i) தற்போதைய பதவி : ————.
   (ii) திணைக்களம் : ————.
   (iii) சம்பள விவரங்கள் : ————.
7. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சைகளைக் குறிக்குக) : ————.
8. தொழினுட்பத் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சைகளைக் குறிக்குக) : ————.
9. முன்னை அனுபவ் விவரங்கள் : ————.
10. சிங்களத்தில் தகைமை : ————.

இவ் விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விவரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென அத்தாட்சிப்படுத்துகிறேன். இங்கு என்னாற் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும், நியமிக்கப்பட்ட பின்னராயின் எவ்வித நட்ட ஈடுமின்றி விலக்கப்படுவதற்கும் பாத்திரனாவேன் என்பதை அறிந்திருக்கிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

5–75—8.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905

## கட்டடங்கள் திணைக்களம்

### தொழினுட்ப உதவியாளர் பதவி (துப்பரவு ஏற்பாடு)

இத்திணைக்களத்திலுள்ள தொழினுட்ப உதவியாளர் (துப்பரவு ஏற்பாடு) பதவிக்கு இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே தரப்பட்டுள்ள படிவத்தில் நிரப்பப்பட்டு, கட்டடங்கள் பணிப்பாளர், கீளை " எம்ச " கட்டடங்கள் திணைக்களம், த. பெ. இல. 504, கொழும்பு 1 என்ற முகவரிக்குப் பதிவு அஞ்சலில் 1970 ம் ஆண்டு ஜூன் 5 ம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் அவருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2. **வேதனம்.**—இந்தப் பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் ஆண்டிற்கு ரூபா 5,016 இல் தொடங்கி 144 ரூபாவையும் 180 ரூபாவையும் கொண்ட ஆண்டு உயர்ச்சிகள் பெற்று ஆண்டிற்கு ரூபா 7,320 வரை செல்லும். ஆண்டிற்கு 7,320 ரூபாவைப் பெறுமிடத்து இரு ஆண்டுகள் சம்பள உயர்ச்சி நிறுத்தப்படும். பின்னர் ஆண்டிற்கு 7,500 ரூபாவிற்றொடங்கி 180 ரூபாவையும், 240 ரூபாவையும் கொண்ட ஆண்டு உயர்ச்சிகளைப் பெற்று ஆண்டுக்கு ரூபா 9,290 வரை செல்லும்.

3. **வயது.**—40 வயதிற்கு மேற்பட்டவராய் இருத்தலாகாது. (ஏற்கனவே அரசாங்க சேவையில் இருப்பவருக்கு இவ்வயது எல்லை பொருந்தாது).

4. **பதவி நியமன நியதிகள்.**—

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்தைக் கொண்டதுமாகும். நியமனம் பெறுபவர்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை அளித்தல் வேண்டும்.

(ii) குறுகிய கால அறிவித்தலில் நியமனப் பொறுப்பேற்க அவர்கள் வேண்டப்படுவர்.

5. **வேண்டிய தகைமைகள்.**—

(i) சிறந்த ஒழுக்கமும் உடல் நலமும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) இரண்டிற்கு மேற்படாத தடவைகளில் சிங்கள/தமிழ் மொழி, கணிதம் (தூய அல்லது பிரயோக) பௌதிகம் என்பன உட்பட ஆறு பாடங்களில் கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தரம்) அல்லது கணிதம் (தூய அல்லது பிரயோக) பௌதிகம் ஆகிய பாடங்களுடன் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சை அல்லது இதற்கு ஒத்த அல்லது உயர் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(iii) இலங்கைத் தொழினுட்பக் கல்லூரியில் கட்டட அமைப்புப்படி I லும் படி II லும் சித்தியடைந்திருக்க வேண்டியதோடு இலங்கைத் தொழினுட்பக் கல்லூரியின் மாநகர எந்திரவியலில் 3 ஆண்டு பகுதி நேரப் பயிற்சியினைப் பூர்த்தி செய்து அல்லது வேறு உயர் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) குறைந்தது பத்து ஆண்டு அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். இதில் குறைந்தது மூன்று ஆண்டுகளாவது படவரைவு அலுவலக அனுபவமாக இருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பக்காரர்கள் பின்வரும் சாதனங்களின் படிகளை (மூலங்கள் அல்ல) இணைத்தல் வேண்டும் :—

(i) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்காகிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ii) உயர் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்.

(iii) பெறப்பட்ட தொழினுட்பத் தகைமைச் சான்றிதழ்கள்.

(iv) முன்னை அனுபவத்தையும் நியமனங்களையும் குறிக்கும் சான்றிதழ்கள்.

(v) அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட இரு குணவியல்புச் சான்றிதழ்கள் (அரசாங்க சேவையில் ஏற்கனவே இருக்கும் வேட்பாளர்கள் இந்தத் துணைப் பிரிவின்கீழ் நற்சான்றிதழொன்றை அளிக்க வேண்டப்படமாட்டார்).

7. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்கள், அவரவர் திணைக்களங்களின் தலைவர்களினூடாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விதித்த திகதிக்குப் பின்னர் இந்த அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள், விதித்த திகதிக்கு முன் விண்ணப்ப காரரின் திணைக்களத் தலைவரினால் பெற்றுக் கொள்ளப்பட்டு, சம்பந்தப் பட்ட திணைக்களத் தலைவரினால் தாமதத்திற்கான தகுந்த காரணம் காட்டப்பட்டு சிபாரிசு செய்யப்பட்டாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

8. இந்த வர்த்தமானியின் பகுதி I இன் பிரிவு (II) இன் தொடக் கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைக் கவனிக்கு மாறு வேண்டப்படுகிறது.

9. விண்ணப்பங்கள் அல்லது அதன் தொடர்பான வேறு ஏதேனும் கடிதத் தொடர்புகள் பந்தி 1 இல் குறிப்பிட்டவாறன்றி, இந்தத் திணைக்களத்து உத்தியோகத்தர் எவருக்கேனும் நேரடியாக முகவரியிடப் படலாகாது.

கட்டடங்கள் திணைக்களம், ஜே. பி. வீரரத்ன,
கொழும்பு, கட்டடங்கள் பணிப்பாளருக்காக.
1970 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 27 ந உ.

## கட்டடங்கள் திணைக்களம்

**தொழினுட்ப உதவியாளர் (துப்பரவு ஏற்பாடு) பதவிக்கான விண்ணப்பம்**

1. (i) பெயர் (முதலெழுத்துக்களுடன்) : ————.
   (ii) முழுப் பெயர் : ————.
   (தனித்தனி எழுத்துக்கள்)
2. அஞ்சல் முகவரி : ————.
3. (i) பிறந்த திகதியும் இடமும் : ————.
   (ii) ஆம் ஆண்டு ஆம் திகதியன்று வயது : ————.
   ஆண்டு : ————. மாதம் : ————.
4. நாட்டினம் : ————.
   (i) பரம்பரையிலா அல்லது பதிவாலா இலங்கைக் குடி : ————.
5. பிறந்த இடம் : ————.
   (i) விண்ணப்பகாரரின் தந்தை : ————.
   (ii) விண்ணப்பகாரரின் தந்தை வழிப் பேரன் : ————.
   (iii) விண்ணப்பகாரரின் தந்தை வழிப் பூட்டன் : ————.
6. தற்போது வகிக்கும் பதவி இருப்பின் : ————.
   (i) தற்போதைய பதவி : ————.
   (ii) திணைக்களம் : ————.
   (iii) சம்பள விவரங்கள் : ————.
7. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சைகளைக் குறிக்குக) : ————.
8. தொழினுட்பத் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சைகளைக் குறிக்குக): ————.
9. முன்னை அனுபவ விவரங்கள் : ————.
10. சிங்களத்தில் தகைமை : ————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விவரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென அத்தாட்சிப்படுத்துகிறேன். இங்கு என்னால் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களில் எவையேனும் பொய் யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும் நிய மிக்கப்பட்ட பின்னராயின் எவ்வித நட்ட ஈடுமின்றி விலக்கப்படுவதற்கும் பாத்திரனாவேன் என்பதை அறிந்திருக்கிறேன்.

————
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

5-83—8.5.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,905.

---

## திருகோணமலை மாவட்டத்தில் மூதூர்ப் பிரிவிற்கு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி

மூதூர்ப் பிரிவு பிறப்பு, இறப்புப் பகுதியில் நிரந்தரமாக குடியிருப்பவர் கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொதுமக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப் படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங் களும், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும் கூட்டுறவுத் தாபன நிலையங்களிலும், இந்தப் பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப் பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள் ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1970 ம் ஆண்டு யூன் மாதம் 15 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

சோமபால குணதீர,
பெரும்பகுதிப் பதிவுகாரர்.

பெரும்பகுதிப் பதிவுகாரர் அலுவலகம்,
திருகோணமலை,
1970 ம் ஆண்டு சித்திரை மீ 24 ந உ.

5-12—8.5.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,905

---

## திருகோணமலை மாவட்டத்தில் கொட்டியார் வடபிரிவிற்கு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி

கொட்டியார் வடபிரிவு பிறப்பு, இறப்புப் பகுதியில் நிரந்தரமாக குடி யிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர் களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அர சாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வய தெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங் களும், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச்சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும், இந்தப் பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப் பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1970 ம் ஆண்டு யூன் மாதம் 15 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண் டும்.

சோமபால குணதீர,
பெரும்பகுதிப் பதிவுகாரர்.

பெரும்பகுதிப் பதிவுகாரர் அலுவலகம்,
திருகோணமலை,
1970 ம் ஆண்டு சித்திரை மீ 24 ந உ.

5-3—8.5.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,905

## இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி கட்டுபெத்தை, மொறட்டுவை

### வேலைக்கள மேற்பார்வையாளர் பதவிகள்

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் வேலைக்கள மேற்பார்வையாளர் பதவிகளுக்கு கீழே குறிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க் காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் 1970 ம் ஆண்டு மே 31 திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "அதிபர், இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி, கட்டுபெத்தை, மொறட்டுவை, 2" என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**

(i) இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையது மாகும். விதவைகள், அனுதைகள் இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்துக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும் ;

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர், அரசகரும மொழி நோக்கத்தின் பொருட்டு அரசினர் சேவையில் புதிய முறைப்படி நியமனம் பெறுபவராயின் அவருடைய பரீட்சார்த்த காலம் 3 வருடங்களாக அமையும் ;

(iii) அரசினர் சேவையிலுள்ள நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து, அவருடைய நியமனம் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு பதில் அல்லது தகுதிகாண் முறையில் அமையும் ;

(iv) தெரிவு செய்யப்படுபவர் தீவின் எப்பகுதியிலும் கடமைபுரிய வேண்டும் ;

(v) ஒரு நேர்முகப் பரீட்சை, செய்கைமுறைப் பரீட்சை ஆகியவை மூலம் தெரிவு நடைபெறும்.

3. **சம்பளமும் சகாயப் படிகளும்.**—இப்பதவிக்குரிய ஒன்று திரட்டிய சம்பள அளவுத் திட்டம் ரூபா 4,152 — 144 — 6,456 (வருடாந்தம்) ஆகும்.

4. **தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :

(அ) (1) (அ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் ; அல்லது

(ஆ) இரண்டு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, சிங்கள/தமிழ் மொழியும் எண்கணிதமும்/கணிதமும் உட்பட ஆறு பாடங்களில் க. பொ. த. (சாதாரணதரம்) பத்திரம் ; அல்லது

(இ) சமமான அல்லது உயர்ந்த தகைமைகள் பெற்றிருக்க வேண்டும் ;

(2) (அ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியால் வழங்கப்படும் (பின்னேர வகுப்பு) பொறிமுறை எந்திரவியல் தராதரப் பத்திரமும் 3 வருடங்களுக்குக் குறையாத கால வேலைக்கள அனுபவமும் ; அல்லது

(ஆ) சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிலையத்தால் வழங்கப்படும் வேலைக்கள எந்திரவியல் இடைமாணித் தராதரப்பத்திரமும் 3 வருடங்களுக்குக் குறையாத கால வேலைக்கள அனுபவமும் ; அல்லது

(இ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் வேலைக்களப் பயிற்சியில் வழங்கப்படும் 2 வருட தராதரப் பத்திரமும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்ப நிலையத்தில் தொழில் நுட்பத் தொழில் ஒன்றில் 5 வருடங்களுக்குக் குறையாத சேவையும் ; அல்லது

(ஈ) சமமான அல்லது உயர்ந்த தகைமைகள் பெற்றிருக்க வேண்டும்.

(3) நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் வகுப்புகளைச் சிங்களத்தில் நடத்தக் கூடியவராய் இருக்கவேண்டும். நிருவாக அனுபவம் பெற்றுள்ளவர்களுக்கு முதன்மை அளிக்கப்படும் ;

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியன்று 23 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(இ) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

5. அபேட்சகர்கள் வேண்டப்படும் நேரத்தில் பின்வரும் சாதனங்களின் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) சி. பா. த. பத்திரம் அல்லது க. பொ. த. (சாதாரணதர) பத்திரம்;

(ஆ) மேற்போந்த 4 (அ) (2) ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தராதரப் பத்திரங்கள் (அனுபவத்தை நிரூபிக்கும் சான்றிதழ்கள் உட்பட)

(இ) சிங்களத்தில்/தமிழில் அல்லது இரு மொழிகளிலும் சித்தி எய்திய ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம் ;

(ஈ) நிருவாக அனுபவம் சம்பந்தமான சான்றிதழ்கள்.

குறிப்பு.—(i) சாதனங்களேனும் சாதனங்களின் பிரதிகளேனும் விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படலாகா ;

(ii) வேண்டப்படும் நேரத்தில் சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப் படமாட்டா.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைத் தத்தம் பகுதி/நிலையத் தலைவர்கள் மூலம் அனுப்பவேண்டும். தாமதித்துப் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் உரிய பகுதி/நிலையத் தலைவர்களால் விதிக்கப்பட்ட திகதிக்கு முன் பெறப்பட்டு அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு அத்தலைவர் நியாயமான காரணங்கள் காட்டி சிபாரிசு செய்தாலன்றி அவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

8. விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமையற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படமாட்டார்கள்.

எல். எச். சுமனதாச,
அதிபர்,
இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி.

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி,
கட்டுபெத்த,
மொறட்டுவை.
1970 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 29 ந் உ.

### மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி**

**வேலைக்கள மேற்பார்வையாளர் பதவிகள்**

1. முழுப்பெயர் (தெளிவாக எழுதவும்) : ————.
2. விலாசம் : ————.
3. சொந்த இடம் : ————.
4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று உள்ளபடி வயது : ————.
   பிறந்த திகதி :
5. பின்வருவோர் பிறந்த இடம் :—
   (அ) விண்ணப்பதாரி : ————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.
6. வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா நீர் இலங்கைப் பிரசை ? : ————.
7. கல்வித் தகைமைகள் :—
   (i) சி. பா. த. அல்லது க. பொ. த. (சாதாரணதர) பத்திரங்கள் பற்றிய விபரங்கள் (சித்தியெய்திய வருடமும் பாடங்களும் குறிப்பிடப்படவேண்டும்) : ————.
   (ii) அறிவித்தலில் 4 (அ) (2) ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரப் பத்திரங்கள் பற்றிய விபரங்கள் : ————.
   (iii) நிருவாக அனுபவம் பற்றிய விபரங்கள் : ————.
   (iv) சிங்களத்தில்/தமிழில் சித்தி எய்திய ஆகக்கூடிய பரீட்சைகள் : ————.
8. 4 (அ) (2) ம் பந்தி பிரகாரம் சேவை பற்றிய விபரங்கள் : ————.
9. விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா : ————.
10. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம் மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) தீர்ப்பு அளிக்கப்பட்ட திகதி (ஆ) வழக்கு எண், (இ) குற்றத் தீர்ப்பின் தன்மை ஆகியவற்றை குறிப்பிடுக : ————.
11. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின், எவ்வளவுக்கு : ————.
12. உமக்கு எதிராக யாதேனும் ஒழுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் முழு விபரங்களையும் கொடுக்கவும் : ————.
13. முன்னர் யாதேனும் படையில் சேவை புரிந்து விலகியவராயின்
   (அ) படைக்கூற்றின் பெயர் :—
   (ஆ) வகித்த பதவி : ————.
   (இ) சேர்ந்த, விலக்கப்பட்ட திகதிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக : ————.
14. பாடசாலையிலிருந்து விலகிய காலம் தொடக்கம் புரிந்த உத்தியோகம்.
   (அ) வகித்த பதவிகள் : ————.
   (ஆ) சேர்ந்த விலகிய திகதிகள் : ————.
   இ) விலகியதற்கான காரணம் : ————.

15. அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு ஸ்தல ஆட்சிச் சபையின் கீழ் முன்னர் கடமைபுரிந்திருப்பின் நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்தகைய உத்தியோகம் (ஆ) சேர்ந்த, விலகிய திகதிகள் (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் : ————.

16. தற்போதைய உத்தியோகம் — நிலையம் : ————

(i) பதவிப் பெயரும் தரமும் : ————.

(ii) நியமனத் திகதி : ————.

(iii) ஓய்வுபெற்றுச் சம்பள உரித்துடையதா, தற்காலிகமானதா, அல்லது சமயோசிதமா ? : ————.

(iv) தற்போதைய சம்பளமும் (சகாயப்படிகள் நீங்கலாக) சம்பள விகிதமும் : ————.

(v) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி : ————.

17. வேறு யாதேனும் விபரங்கள் : ————.

18. இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யனவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவ ராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரவாவேன் என அறிவேன்.

————.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

இடம் : ————.

திகதி : ————.

**பகுதித் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்**

எனதெண் : ————

நிரந்தரக் காரியதாரிசி,
கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு,

இவ்விண்ணப்பம் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்/பின்* இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டது .............................. ஆம் இலக்கப் பந்திகளில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் பின்வரும் திகதிகளுக்கமைய சரியானவையென அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————.
பகுதித் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயர் : ————.

திகதி : ————.

(* பொருத்தமற்றவற்றைக் கீறிடுக)

5–36—8.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905.

---

## விவசாயத் திணைக்களம்

### I ம் தர போர்மன் பதவி—பொறியியல் பகுதி

26.12.1969 ஆம் திகதிய 14,886 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் மேற்குறிப்பிட்ட பதவிக்குக் கோரப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக.

2. பந்தி 4 (11) ல் குறிப்பிடப்பட்ட வயது எல்லை அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

3. விண்ணப்பங்களின் முடிவு திகதி 7.6.1970 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**26.12.1969 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியின் விளம்பரத்துக்கு இணங்க விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.**

எல். பீ. மாறம்பே,
விவசாய அதிபருக்காக.

விவசாயத் திணைக்களம்,
பேராதனை,
1970 ம் ஆண்டு ஏப்ரல் மீ 25 ந உ.

5–6—8.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905.

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திறைசேரி இல. 1/23/21/8 (ஜி.)

## மொழிபெயர்ப்பாளர் சேவையில் ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை—யூலை, 1970

திறைசேரிப் பிரதிச் செயலாளரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மொழிபெயர்ப்பாளர் சேவைக்கு இரு பாலாருமான பரீட்சார்த்திகளைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையொன்று பரீட்சை ஆணையாளரினால் 1970 யூலை 17 ஆந் தேதி தொடங்கி கொழும்பில் நடாத்தப்படும்.

2. **சம்பளம்.**—சித்தியடையும் பரீட்சார்த்திகள் மொழிபெயர்ப்பாளர் சேவையில் ஆண்டுத்திரட்டிய சம்பளமாக 3,864 ரூபாவில் தொடங்கி 144 ரூபா, 180 ரூபா ஆண்டேற்றங்களுடன் 8,040 ரூபாவரையுள்ள சம்பளத்திட்டத்தில் நியமிக்கப்படுவர். இச்சம்பளத்திட்டம் இரு பிரிவாக அமையும் : (அ) 3,864—144—6,456, (ஆ) 5,736—144 இல் 6 ; 180 இல் 8—8,040.

**குறிப்பு.**—(அ) பிரிவிலுள்ள உத்தியோகத்தர் ஒருவர் (ஆ) பிரிவிற்குப் பதவியேற்றம் பெற முன்னர் தகுதிகாண் பரீட்சையொன்றில் சித்தியடைதல் வேண்டும். (அ) பிரிவில் 10 ஆண்டுகள் சேவை செய்துள்ளோர் மாத்திரம் இப்பரீட்சையெடுப்பதற்குத் தகுதியுடையவராவர்.

3. **சேவை நிபந்தனைகள்.**— (i) இப்பரீட்சையில் சித்தியடையும் ஆண் பரீட்சார்த்திகள் நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுத் தகுதிகாண் நிலையில் நியமனம் பெறுவர். அவர்களின் பதவிகள் உபகாரச் சம்பளத்துக்குரியன.

(ii) இப்பரீட்சையில் சித்தியடையும் பெண் பரீட்சார்த்திகள் முதலில் சகாய நிதி அடிப்படையில் நியமிக்கப்பட்டு, நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுக் காலத்துக்குச் சோதனை நிலையில் இருப்பர். அவர்கள் 10 ஆண்டுச் சேவை முடியுமுன்னர் எக்காலத்திலாவது உபகாரச் சம்பள நிலையைச் சேரும் விருப்புரிமையுடையவராவர். ஒருமுறை இவ் விருப்புரிமையைப் பிரயோகித்தால் அதனைப் பின்னர் மீட்க முடியாது. சோதனைக்காலத்தில் இவ்விருப்புரிமையைப் பிரயோகிக்கும் பெண் பரீட்சார்த்திகள் பின் தகுதிகாண் நிலையிலிடப்படுவர். அத்தகுதிகாண் நிலைக்காலம், அவர்களின் மூன்று ஆண்டுச் சோதனைக்காலத்தில் மேலும் எஞ்சியிருக்கும் காலத்துக்குச் சமமாகும்.

(iii) அவர்கள் இடமாற்றத்துக்குரியவர் ; இலங்கையில் எந்நிலையத்திற்காவது அவர்களை அனுப்பலாம்.

(iv) அரசகரும மொழிக் கொள்கை நோக்கத்துக்காகப் “ புதிதாகச் சேர்ந்தோர் ” எனக் கருதப்படும் சித்தியடையும் பரீட்சார்த்திகள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நடைமுறையில் கொண்டுவருவதற்கு இப்போது நடைமுறையிலிருக்கும் அல்லது இனிமேல் புகுத்தப்படும் சட்டங்களுக்கும், விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவோமென்னும் நிபந்தனையை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

(தமிழ்) மொழிப்பெயர்ப்பாளர்களாக நியமனம் பெறுவதற்குத் தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள், அரசகரும மொழிக்கொள்கை நோக்கத்துக்குப் “ புதிதாகச் சேர்ந்தோர் ” ஆயின், தமது தகுதிகாண்/சோதனை நிலைக் காலத்தில் அரசகரும மொழியாகிய சிங்கள மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும். இப் பரீட்சார்த்திகளின் தகுதிகாண்/சோதனை நிலை முடிவடையும்போது அவர்களின் திருத்திகரமான சேவையையும் நடத்தையையும் பொறுத்தும், விதிக்கப்பட்டுள்ள சிங்கள மொழித் தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தியடைவதைப் பொறுத்தும் அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர்.

(v) படிகளும் பிற சேவை நிபந்தனைகளும் சம்பந்தமாக, இச்செய்தி மடலின் I ஆம் பகுதி, II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

4. **தகவுத்திறன்.**— இப்பரீட்சைக்கான பரீட்சார்த்திகள்—

(i) நற்பண்புள்ளவராயிருத்தல் வேண்டும் ;

(ii) *இலங்கையராயிருத்தல் வேண்டும் ;

(iii) குறைந்த பட்சம் பின்வரும் பிரதான தேவைகளிலொன்றை யாவது உடையவராயிருத்தல் வேண்டும் :—

(1) சிங்களத்தில் அல்லது தமிழில் இலண்டன் பல்கலைக்கழகக் கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்) ;

(2) சிங்களத்தில் அல்லது தமிழில் இலங்கைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (உயர் தரம்) ;

(3) சிங்களம் அல்லது தமிழ் (விசேட சிங்களம் அல்லது விசேட தமிழ் அல்ல) ஒரு பாடமாகக் கொண்ட உயர்தரப் பாடசாலைத் தராதரப்பத்திரம் ;

(4) சிங்களம் அல்லது தமிழ் ஒரு பாடமாகக் கொண்ட இலண்டன் பல்கலைக்கழக இடைக்கலைத் தராதரப்பத்திர/இலங்கைப் பல்கலைக் கழக பொதுக்கலைத் தகைமை (முதற்) பரீட்சைத் தராதரப்பத்திரம் ;

(5) பொதுத் திறைசேரியின் சிங்கள/தமிழ் தேர்ச்சிப் பரீட்சையில் உயர் தரத்தில் சிங்களத்தில் அல்லது தமிழில் சித்தி ;

அத்துடன், குறைந்த பட்சம் பின்வரும் துணைத் தேவைகளில் ஒன்றையும் பெற்றிருத்தல் வேண்டும் :—

(அ) சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் (ஆங்கிலம்) ;

(ஆ) சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் (ஆங்கிலமொழி மூலம்) க. பொ. த. ப. (சாதாரணகட்டம்) பரீட்சையில் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(இ) இரு முறைகளுக்கு மேற்படாமல் ஆங்கிலமொழி (" அ " பாடத் திட்டத்தில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தியுடன் ஆறு பாடங்களில் க. பொ. த. ப. (சாதாரணகட்டம்) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஆங்கிலமொழி மூலம்) க. பொ. த. ப. ஆங்கிலமொழியில் சித்தியானது " அ " பாடத்திட்ட ஆங்கில மொழிக்குப்பதிலாக ஏற்றுக்கொள்ளப்படும் ;

(ஈ) இரு முறைகளுக்கு மேற்படாமல், ஆங்கிலமொழி " ஆ " பாடத் திட்டத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் க. பொ. த. ப. (சாதாரணகட்டம்) சித்திபெற்றிருத்தல் வேண்டும் ;

(உ) ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டு மேற்கூறியவற்றிற்குச் சமமான அல்லது உயர்ந்த எச்சான்றிதழும்.

**குறிப்பு.**—மேலே கூறப்பட்ட பரீட்சைகளில் ஏதேனும் ஒன்றையெடுத்து இப்பரீட்சைககுரிய விண்ணப்பங்களின் முடிவுத் தேதிக்கு முன்னர் அதன் பெறுபேறுகள் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(iv) 1970 யூலை 1 ஆந் தேதியில் 19 வயதுக்குக் குறையாதவர்களாயும் 30 வயதுக்கு மேற்படாதவர்களாயுமிருத்தல் வேண்டும்.

*அரசாங்க சேவைக்கு ஆட்சேர்க்கும் சகல நோக்கங்களுக்கும் " இலங்கையர் " என்னும் பதம் பரம்பரையினுல் அல்லது பதிவினுல் இலங்கைக் குடியென வரையறுக்கப்பட்டுள்ளது.

**5. தகவுந்திறன்.**—இலங்கையிலுள்ள ஐக்கிய இராச்சிய சேவைகளிலிருந்து ஆட்குறைப்புச் செய்யப்பட்ட குடியியல் ஊழியர்களுக்கும், ஆயுதந்தாங்கிய படையின் முன்னுட் சேவையாளர்களுக்கும் விசேட சலுகைகள்.

(i) தளங்களை எடுத்துக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்ததன் பயனாக 1956 யூலை 6 ஆந் தேதியில் அல்லது அதற்குப் பின்னர் இலங்கையிலுள்ள ஐக்கிய இராச்சியச் சேவைகளிலிருந்து விலக்கப்பட்ட இலங்கையரான குடியியல் ஊழியர்களும், நாரஹென்பிற்றவில் இருந்த வேத்தியற் கடற்படைக் கம்பியிலி நிலைய (அனடோர்சன் நிலைய) த்தை திருகோணமலை மாவட்டத்திலுள்ள பெரிய கரைச்சிக்கு மாற்ற அரசாங்கம் தீர்மானித்ததன் விளைவாக 1954 செத்தெம்பர் 27 ஆந் தேதிக்குப் பின்னர் அந்நிலையத்திலிருந்து விலக்கப்பட்ட ஊழியர்களும், மற்றெல்லா வகைகளிலும் தகைமையுடையோராயின், பின்வரும் சலுகைகளுக்குத் தகுதியுடையவராவர் :—

4. (iv) ம் பந்தியில் விதிக்கப்பட்டிருக்கும் வயதெல்லையின் பொருட்டு வயதைக் கணிப்பதில், ஐக்கிய இராச்சியச் சேவைகளில் அவர்களின் சேவை தொடர்ச்சியானதாகவும் திருத்திகரமானதாகவுமிருந்திருப்பின், அச்சேவைக் காலத்தைத் தங்கள் வயதிலிருந்து கழித்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர்.

(ii) ஆயுதந்தாங்கிய படையின் முன்னுட் சேவையாளர் பின்வரும் சலுகைக்குத் தகவுடையவராவர் :—

4 (iv) ம் பந்தியில் விதிக்கப்பட்டிருக்கும் வயதெல்லையின் பொருட்டு வயதைக் கணிப்பதில், அவமானம் சூட்டி விலக்கப்பட்ட அல்லது பதவி நீக்கம் செய்யப்பட்ட அல்லது இழுக்குடன் பதவி நீக்கப்பட்ட அல்லது எவ்வொழுககவீனம் காரணமாகவேனும் சேவையிலிருந்து விலக்கப்பட்டவர்களைத் தவிர்ந்த நியமப் படையிற் சேவையாற்றிய பின்னர் ஒதுக்கப்படைக்கு மாற்றப்பட்ட ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர்கள் அல்லது உத்தியோகத்தர்களும் சேவையாளர்களும் ஆகிய ஆயுதந்தாங்கிய படைகளின் முன்னுட் சேவையாளர்கள் நியமப் படையில் தாம் ஆற்றிய சேவைக்காலத்தைத் தங்கள் வயதிலிருந்து கழித்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர்.

**6. ஆட்குறைப்பினுல் வேலையிழந்த ஊழியர்களுக்கு விசேட சலுகை.**—நிரந்தரமுறையிலோ தற்காலிக முறையிலோ அரசாங்க சேவையிலிருந்து வேலையோ, ஒழுக்கமோ திருத்திகரமாகவில்லையென்ற காரணத்தினுலன்றி வேறு காரணங்களால் வேலையிழந்தவர்கள் பின்வரும் சலுகைக்குத் தகவுடையவராவர் :—

4 (iv) ம் பந்தியில் விதிக்கப்பட்டிருக்கும் வயதெல்லையின் பொருட்டு வயதைக் கணிப்பதில், பதவியிலிருந்து நீக்கப்பட்டது அல்லது திருத்தியற்ற வேலை அல்லது பதவியிலிருந்து தாமாக விலகிக் கொண்டது காரணமாக வேலையிழக்காதோர் அரசாங்கத்திற் சேவையாற்றிய காலத்தைத் தம் வயதிலிருந்து கழித்துக்கொள்ள அவர்கள் அனுமதிக்கப்படுவர்.

**7. தகவுத்திறன்.**—அரசாங்க ஊழியர்களுக்கு விசேட சலுகைகள் :

(i) நிரந்தர ஊழியர்கள்.—1970 ஏப்பிரல் 29 ஆந் தேதியன்று அரசாங்கத்தில் நிரந்தர பதவி வகிப்பவர்கள், பின்வரும் தகைமைகளைப் பெற்றிருப்பின், இப்பரீட்சைக்குத்தோற்ற அனுமதிக்கப்படுவர் :—

(அ) அவர்கள் 4 (iii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(ஆ) அவர்கள் 1970 யூலை 1 ம் தேதி 45 வயதுக்குக் கீழ்ப்பட்டவராயிருத்தல் வேண்டும் ;

(இ) அவர்களின் திணைக்களத்தலைவர்கள் அவர்களின் சேவை திருத்திகரமானதென உறுதிப்படுத்துவதோடு, அவர்கள் மொழிபெயர்ப்பாளர் சேவையில் நியமனம் பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர்களைப் பதவியினின்றும் விடுவிக்கத் தயாராயிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—மேற்போந்த வகையிலுள்ள, 1956 செற்றம்பர் 24 ஆந் தேதிக்கு முன்னர் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இப்பரீட்சையில் சித்தியடைவார்களாயின் அரசகரும மொழிக் கொள்கை நோக்கத்துக்காக " முன்னர்ச் சேர்ந்தோர் " எனக் கருதப்படுவர்.

(ii) தற்காலிக ஊழியர்கள்.—அரசாங்கத்தில் தற்காலிகப்பதவி வகிப்பவர்கள், பின்வரும் தகைமைகளைப் பெற்றிருப்பின், இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர் :—

(அ) அவர்கள் 4 (iii) ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(ஆ) அவர்கள் 1970 யூலை 1 ஆந் தேதி 45 வயதுக்குக் கீழ்ப்பட்டவராயிருத்தல் வேண்டும் ;

(இ) அவர்கள் 1970 ஏப்பிரல் 29 ஆந் தேதியன்று குறைந்த பட்சம் ஓராண்டாவது அரசாங்கத்தில் தொடர்ந்து சேவை செய்திருப்பதுடன், அவர்களின திணைக்களத் தலைவர்கள் அவர்களின் சேவை திருத்திகரமானதென உறுதிப்படுத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—1963 திசெம்பர் மாதம் 4 ஆந் தேதிய 629 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் 3 ம் பந்தியில குறிப்பிட்டுள்ள வகுதிகளிலுள்ள நிரந்தர, தற்காலிக அல்லது அமய ஊழியர்கள், ஆயுதந் தாங்கிய படைகளையும் பொலிசுப் படையையும், சேர்ந்தோர், உள்ளூராட்சிச் சேவை ஊழியர், மாணவ ஆசிரியர், சபைகள், கூட்டுத்தாபனங்கள், அவை போன்ற தன்னுட்சியுள்ள சபைகள் ஆகியவற்றின் ஊழியர் ஆகியோர் மேலே பந்திகள் 7 (i), 7 (ii) என்பவற்றில் தரப்பட்டுள்ள சலுகைகளுக்கு உரித்துடையராகார்.

**8. விண்ணப்பங்கள்.**—(i) இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் பதிவுக் கடிதம் மூலம் பரீட்சை ஆணையாளர், கொழும்பு 2 என்னும் விலாசத்தில் 1970 யூன் 2 ஆந் திகதியன்றே அதற்கு முன்னரோ பெறுமாறு அனுப்பப்படல் வேண்டும்.

குறித்த தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலுறையின் இடது பக்க மேல மூலையில் பரீட்சையின் பெயர் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் 25 ரூபா பெறுமதியுள்ள முத்திரைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அவை பரீட்சார்த்தியின் கையொப்பத்தினுலும் தேதியினுலும் முறைப்படி அழிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) ஏற்கனவே அரசாங்கத் திணைக்களங்களில் அலுவல் பார்க்கும் பரீட்சார்த்திகள், தாங்கள் கடமையாற்றும் அரசாங்கத் திணைக்களத் தலைவர்களினூடாகவே தங்கள் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். 6 ஆம் பந்தியின் கீழ் தகவுகோரும் பரீட்சார்த்திகள், தாம் கடைசியாகச் சேவையாற்றிய திணைக்களத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். பரீட்சார்த்தி எவராவது அவ்வாறு செய்யத் தவறினுல் அவர் தகுதியிழந்தவராகக் கருதப்படுவர். 1970 யூன் 2 ஆந் திகதியன்றே, அதற்கு முன்னரோ பரீட்சை ஆணையாளரிடம் சேரும் வண்ணம் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு வேண்டுகோள் ஒன்றையும் செய்து, பரீட்சார்த்திகள் தங்கள் விண்ணப்பங்களைத் தங்கள் திணைக்களத் தலைவர்களுக்கு நேரகாலத்தோடேயே அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(v) விண்ணப்பப்பத்திரம் முழுத்தாளின் அரைத் தாளில் (வேறளவினதான தாளில் அல்ல) தயாரிக்கப்படுதல் வேண்டும். அப்பத்திரத்தின் 1 முதல் 8 வரையான கூண்டுகள் 1 ஆம் பக்கத்திலும், அத்தாட்சிப் படுத்தலும் திணைக்களத்தலைவரின் உறுதிப்படுத்தலும் 2 ஆம் பக்கத்திலும் அமைதல் வேண்டும்.

(iv) விண்ணப்பகாரரின் கையொப்பம் அதிகாரமளிக்கப்பட்டவரொருவரினுல் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்டவர்கள் : சமாதான நீதவான் அல்லது சத்திய ஆணையாளர் அல்லது வழக்கறிஞர் அல்லது பிரசித்த நொத்தாரிசு அல்லது அரசாங்க அல்லது கல்விப்பணிப்பாளரின் முகாமையிலான பாடசாலை அதிபர் அல்லது கடற்படை, விமானப்படை, தரைப்படை ஆகியவற்றின் ஆணை பெற்ற உத்தியோகத்தர் அல்லது 4,800 ரூபாவோ அதற்கு மேலோ ஆண்டுத் திரட்டிய சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் அல்லது

விகாராதிபதி அல்லது பௌத்த கோயிலின் உயர்குரு அல்லது வணக்கத்துக்குரிய தலமொன்றினது பொறுப்பாளராகவிருக்கும் அன்றேல் முக்கியத்துவமான பதவியொன்றை வகித்து வரும் பிற சமயக்குரு.

**குறிப்பு.**—1969.12.12 ஆந் தேதி 14,884 ஆம் இலக்க அரசாங்கச் செய்திமடலில் காணப்படும் 1969.12.4 ஆந் தேதிய இல. 1/23/21/8 (ஜீ) ஐக் கொண்ட திறைசேரி அறிவித்தல், 1969.12.26 ஆந் தேதிய இல. 14,886 ஐக் கொண்ட அரசாங்கச் செய்திமடலில் காணப்படும் 1969.12.26 ஆந் தேதிய இல. 1/23/21/8 (ஜீ) ஐக் கொண்ட திறைசேரி அறிவித்தல் என்பனவற்றிற்கிணங்க மொழிபெயர்ப்பாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏலவே விண்ணப்பித்துள்ள பரீட்சார்த்திகள் இப்பொழுது **புதிய விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டியதில்லை.** அவர்கள் ஏலவே அனுப்பிய விண்ணப்பங்கள் இப் பரீட்சைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

**9. பரீட்சைக்கு அனுமதி.**—(i) பரீட்சை ஆணையாளர் தாம் ஏற்றுக் கொண்ட விண்ணப்பங்களுக்குரிய பரீட்சார்த்திகள் யாவர்க்கும் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவார். பரீட்சைக்குத் தோன்றும் பரீட்சார்த்திகள், அப்பரீட்சையை மேற்பார்வையிடுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தருக்குத் தங்கள் அனுமதிப்பத்திரங்களைக் காட்டுதல் வேண்டும். அத்தகைய பத்திரத்தைக் காட்டத் தவறும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சையெடுப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

பரீட்சார்த்திகள் தங்களுக்குக் குறிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சையை எடுத்தல் வேண்டும். தமக்குக் குறிக்கப்பட்டதல்லாத பிறிதொரு பரீட்சை மண்டபத்திற் சமுகமளிக்கும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சையெடுப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

நேரசூசிப் பிரதியொன்று அனுமதிப்பத்திரத்தோடு அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்குத் தோன்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சைத் தினத்தன்று தமது அனுமதிப்பத்திரத்தை மேற்பார்வையாளரிடம் கொடுத்துவிடல் வேண்டும்.

இவ்வறிவித்தலின் முடிவில் பரீட்சார்த்திகளுக்குரிய விதிகள் வேறுக அச்சிடப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் இவ்விதிகளுக்குக்கட்டுப்பட்டவராவர்.

பரீட்சைக்குக் குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்னர் அனுமதிப் பத்திரம் பெருத பரீட்சார்த்திகள் மலாய் வீதி, கொம்பனித் தெரு, த. பெ. இல. 1503, கொழும்பு 2 என்னும் விலாசத்திலுள்ள பரீட்சை ஆணையாளருடன் (தந்தி விலாசம் : " எக்சாம்ஸ் " கொழும்பு) உடனடியாகத் தொடர்பு கொண்டு அனுமதிப்பத்திரத்தைத் தான் இதுகாறும் பெறவில்லையென அறிவித்துக் கீழ்வரும் தகவலையும் கொடுத்தல் வேண்டும் :—

(1) பரீட்சையின் பெயர் :

(2) முழுப்பெயர் :

(3) முழு அஞ்சல் முகவரி :

(4) அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், அனுப்பிய தேதி :

(ii) இப்பரீட்சைக்கு அனுமதிக்கப்பட்டமை தகவுத்திறனை ஏற்றுக் கொண்டமையாக அமையாது.

எனினும், பரீட்சை ஆணையாளர் தமது தற்றுணிபுப்படி, பரீட்சார்த்தியொருவருக்கு இப்பரீட்சையை எடுப்பதற்குத் தற்காலிகமாக அனுமதி வழங்கலாம். அத்தகைய பரீட்சார்த்தி பரீட்சையெடுத்தமை பின்னர் ஒன்றில் உறுதிப்படுத்தப்படும் அல்லது தள்ளுபடி செய்யப்படும்.

**10. அடையாளச் சீட்டுக்கள்.**—பரீட்சார்த்திகள் தாங்கள் எடுக்கும் ஒவ்வோர் பாடத்துக்கும் பரீட்சை மண்டபத்திலே மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தங்கள் அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இந்த நோக்கத்துக்காகப் பின்வரும் சாதனங்களில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) அஞ்சல் தலைமை அதிபதி வழங்கிய அடையாளச் சீட்டு ;

(ஆ) இப்பரீட்சைத் தேதிக்கு முன் 3 ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் வழங்கப்பட்டதும் வலிவுள்ளதுமான ஒரு கடவுச்சீட்டு (பாஸ்போட்);

(இ) இப்பரீட்சைத் தேதிக்கு முன் 3 ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் ஓர் அரசாங்கத் திணைக்களத்தின் அதிகாரத்தோடு வழங்கப்பட்டதும் வைத்திருப்பவரின் புகைப்படமொன்றைத் தன்னகத்தே கொண்டதுமான ஏதாவதோர் அத்தாட்சிப் பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது பிற சாதனம்.

தமது அனுமதிப்பத்திரத்துடன், மேற்கூறப்பட்ட சாதனங்களிலொன்றில்லாத பரீட்சார்த்தி எவரும் இப்பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

**11. தகுதிச்சாதனங்கள்.**—(i) விண்ணப்பத்தோடு எவ்வித சாதனங்களும் சேர்த்து அனுப்பப்படலாகாது. ஆனல், பத்திரத்திலேயே கேட்கப்பட்டவாறு தேவையான விபரங்களெல்லாம் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்த வகைகளிலெல்லாம் நிறைவு பெற்றிராத ஒரு விண்ணப்பம் அதன் தகுதிக்கேற்பச் சீர்தூக்கி ஆராயப்பட்டு நிராகரிக்கப்படவுங் கூடும்.

(ii) தகைமை பெற்ற பரீட்சார்த்திகளிடமிருந்து, அவர்கள் தங்கள் தகுதியுடைமையை நிரூபிப்பதற்கான சாதனச் சான்று வேண்டப்படும். அத்தகைய பரீட்சார்த்திகள், வாய்மொழிப்பரீட்சை வைக்கப்பட்டால், இச்சாதனங்களைக் காட்டுதல் வேண்டும். அல்லது பரீட்சை ஆணையாளர் கேட்கும் போது தாமதமின்றி அவற்றைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(iii) பின்வரும் சாதனங்கள் தேவையாகும் :—

(அ) பொறுப்புள்ள ஒருவரால் கையொப்பமிடப்பட்டுள்ள ஒரு நற்சான்றுப் பத்திரம்.

**குறிப்பு.**—பரீட்சார்த்தி ஓர் அரசாங்க பாடசாலையில் அல்லது உதவிபெறும் பாடசாலையில் மாணவராகவிருப்பின் அல்லது அண்மையில் விலகியிருப்பின் அப்பாடசாலை அதிபரிடமிருந்தோ நற்சான்றுப் பத்திரம் பெறுதல் வேண்டும். அல்லாவிடின் ஒரு சமாதான நீதவானிடமிருந்தோ, வழக்கறிஞரிடமிருந்தோ நியாய துரந்தரிடமிருந்தோ, நொத்தாரிசிடமிருந்தோ, பெரும்பாக இறை வரி உத்தியோகத்தரிடமிருந்தோ, 4,800 ரூபாவோ அதற்கு மேலோ ஆண்டுத் திரட்டிய சம்பளமாகப் பெறும் ஒருநிரந்தரமான அரசாங்க உத்தியோகத்தரிடமிருந்தோ பெற்றுக் கொள்ளலாம். அல்லது பொதுவாகக் கூறுமிடத்து, பிரசித்தி பெற்றவரும் சாதாரணமாக அறியப்பட்டவருமான ஒருவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு நற்சான்றுப் பத்திரம் வழங்குபவரின் பெயரும், பதவியும், விலாசமும் அதில் தெளிவாகக் காட்டப்படல் வேண்டும்.

அரசாங்க உத்தியோகத்தில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் பரீட்சார்த்திகள் நற்சான்றுப் பத்திரங்கள் காட்டுமாறு வேண்டப்படமாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தியின் பிறப்புப் பதிவின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி அல்லது (பிறப்புப் பதிவு செய்யப்படாத பரீட்சார்த்திகளின் விடயத்தில்) பதிவாளர் நாயகத்தினுல் கொடுக்கப்பட்ட விசேட வயது சாட்சிப் பத்திரம்.

**குறிப்பு.**—(i) பாடசாலைத் தேவைகளுக்கு அல்லது கல்வித் தேவைகளுக்கு வழங்கப்பட்ட விசேட பிறப்பத்தாட்சிப் பத்திரமோ, பிறப்புப் பதிவினின்றும் எடுக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட பகுதியோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(ii) சத்தியக் கடதாசியோ, ஞானஸ்நான அத்தாட்சிப் பத்திரங்களோ பிறப்பத்தாட்சிப் பத்திரங்களுக்குப் பதிலாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

(iii) பிறப்பத்தாட்சிப் பத்திரத்திலுள்ள பெயர்/பெயர்கள், பரீட்சார்த்தி சாதாரணமாக உபயோகிப்பதும்/உபயோகிப்பனவும் இப் பரீட்சையெடுப்பதற்குக் கொடுத்துள்ளதும் / கொடுத்துள்ளனவுமான பெயரினின்றும் வேறுபட்டால், பிறப்புப் பதிவிலுள்ள பெயரைத் திருத்துவதற்கு, 1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பிறப்புப் பதிவுச் சட்டத்தின் 27 அல்லது 28 ஆம் பிரிவின் நியதிகளின்படி உடனே நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1953 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிறப்பு இறப்பு பதிவு (திருத்தச்) சட்டத்தின் 2 ஆம் பிரிவினுல் திருத்தப்பட்டவாருன 1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கப் பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டத்தின் 24 (6) ஆம் பிரிவின் கீழ், பிறந்த ஓராண்டின் பின்னர் செய்யப்பட்ட பிறப்புப் பதிவின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி பிறப்புத் தேதி நிலை நிறுத்தப்பட்டதற்கான சான்றைக் கருத்திற் கொண்ட பின்னர் மட்டுமே, நியமனங்கள் செய்யப்படும் நோக்கத்துக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

நிரந்தர அரசாங்க உத்தியோகத்தில் இருந்து கொண்டு 18.8.57 இன் 394 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தம் பெயர்களை மாற்றியிருக்கும் பரீட்சார்த்திகள் பிறப்புப் பதிவு இடாப்பிலுள்ள தம் பெயர்களை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்கப்பட மாட்டார்கள்.

(இ) இலங்கைப் பிரசையெனப் பதிவு செய்யப்பட்டதற்குரிய பதிவத் தாட்சிப் பத்திரம் அல்லது பரம்பரைப் பிரசையென்னும் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளும் உத்தியோக பூர்வமான மூலம் கடிதம் (ஏற்புடையவிடத்து) ;

(ஈ) கல்வித் தகைமைகள் பற்றிய மூல அத்தாட்சிப் பத்திரங்கள் ;

(உ) இலங்கையிலுள்ள ஐக்கியராச்சியச் சேவைகளில் ஒரு குடியியல் ஊழியராகச் சேவையாற்றியதற்கான மூலச் சான்றிதழ் அல்லது ஆயுதந்தாங்கிய படைகளில் சேவையாற்றியதற்காகச் சான்றிதழ் (5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் விடயத்தில்);

(ஊ) அரசாங்கத்தின் கீழ் சேவையாற்றியதற்கான மூலச் சான்றிதழ்கள் (6 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் விடயத்தில்)

(எ) அடையாளச் சீட்டு (வாய்மொழிப் பரீட்சை நடந்தால், அப்போது மாத்திரம்).

(iv) விண்ணப்பம் செய்யும்போது தேவையான சாதனங்கள் எல்லாவற்றையும் ஆயத்தமாக வைத்திருக்குமாறு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். வாய்மொழிப் பரீட்சை நடந்தால், அப்போது தேவையான சாதனங்களைக் காட்ட முடியாமல் இடர்ப்படும் அல்லது பரீட்சை ஆணையாளர் கேட்கும்போது அவற்றை அனுப்பி வைக்கத் தாமதிக்கும் எப்பரீட்சார்த்தியினதும் பரீட்சைக்கான விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**12. பொய்யான விபரங்கள் கொடுப்போருக்குரிய அபராதம்.**—இப் பரீட்சைக்குரிய பிரமாணங்களின்படி பரீட்சார்த்தியொருவர் தகுதியில்லாதவர் எனக் காணப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் போதோ, பரீட்சைக்குப் பின்போ எந்நிலையிலாவது, அவரைப் பரீட்சார்த்தியென்று அனுமதித்தமை தள்ளுபடி செய்யப்படுவதற்கு ஏதுவாகும்.

பரீட்சார்த்தியொருவர் கொடுத்துள்ள விபரங்களில் எவையேனும் அவருடைய அறிவிற்கு உட்படப் பொய்யானவையெனக் காணப்பட்டால் அல்லது அவர் வேண்டுமென்றே முக்கியமான உண்மையெதையும் மறைத்திருந்தால், அல்லது அவர் நியமனம்பெற்றுச் சேவை செய்யும் காலத்தில் எப்போதாவது அவர் இப்பரீட்சை யெடுப்பதற்கு தகுதியற்றவர் என்பது நிரூபிக்கப்பட்டால், அவர் சேவையிலிருந்து உடனே விலக்கப்படுவதற்கு ஆளாவர்.

**13. பணம் திருப்பிக் கொடுத்தல்.**—எச்சந்தர்ப்பத்திலாவது பணம் எதுவும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. இப்பரீட்சைக்காகக் கொடுத்த கட்டணங்களை வேறெப்பரீட்சைக்கேனும் மாற்ற முடியாது.

**14. பரீட்சை எடுப்பதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விடுதலை.**—பரீட்சை ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோன்றுவதற்காக, அவர்களுக்கு விடுதலை—கடமை விடுதலையன்று—வழங்குமாறு அவர்களுடைய திணைக்களத் தலைவர்கள் வேண்டப்படுகின்றனர்.

**15. பரீட்சைத் திட்டம்.**—இப்பரீட்சை, பகுதி I (எழுத்து), பகுதி II (வாய்மொழி) என இரு பகுதிகளாக நடாத்தப்படும். பரீட்சைக்குரிய பாடங்களும், ஒவ்வொரு பாடத்துக்குமெனக் குறித்தொதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும் கீழே தரப்பட்டுள்ளன. எல்லா விடைத்தாள்களிலும் கூடாத கையெழுத்துக்கும், எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் கழிக்கப்படும். வாசிக்க முடியாத வகையில் எழுதும் பரீட்சார்த்திகள் தகுதியற்றவரென நீக்கிவிடப்படுவதற்கு ஆளாவர்.

**பகுதி I (எழுத்து)**

பரீட்சையின் இப்பகுதி, ஒவ்வொன்றும் 3 மணித்தியாலத்திற்கான இரு வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும்.

| | புள்ளிகள் |
|---|---|
| வினாப்பத்திரம் I (i) ஓர் இலக்கியக் கட்டுரைப் பகுதி ; (ii) ஒரு பொது ஆர்வத்துக்குரிய கட்டுரைப்பகுதி ; (iii) (அ) ஓர் அரசகரும சாதனத்திலிருந்து அல்லது அறிக்கையிலிருந்து ; (ஆ) ஒரு புதினத்தாள் கட்டுரையிலிருந்து அல்லது அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள் ஆகியனவற்றை சிங்களம்/தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல் .. | 100 |
| வினாப்பத்திரம் II (i) ஓர் இலக்கியக் கட்டுரைப் பகுதி ; (ii) ஒரு பொது ஆர்வத்துக்குரிய கட்டுரைப்பகுதி ; (iii) (அ) ஓர் அரசகரும சாதனத்திலிருந்து அல்லது அறிக்கையிலிருந்து ; (ஆ) ஒரு புதினத்தாள் கட்டுரையிலிருந்து அல்லது அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள் ஆகியவற்றை ஆங்கிலத்திலிருந்து சிங்களம்/தமிழில் மொழி பெயர்த்தல் .. | 100 |
| **பகுதி II—வாய்மொழி** .. .. .. | 50 |

முதலில் எழுத்துப் பரீட்சை நடைபெறும். அதன் பெறுபேறுகளின்படி போட்டி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள், அவர்களுக்கு அறிவிக்கப்படும் தேதியொன்றில் கொழும்பில் நடைபெறும் வாய்மொழிப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டிய எண்ணிக்கையை திறைசேரி இணைப்பிரதிச் செயலாளர் பரீட்சை ஆணையாளரோடு உசாவி நிர்ணயிப்பார். எனினும், வெற்றிட எண்ணிக்கையிலும் தகுதிபெறும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை குறைவாகவிருப்பின் இவ்வாய்மொழிப் பரீட்சை கைவிடப்படக்கூடும்.

**11. முடிவுகளை வெளியிடலும் நியமனங்கள் கொடுத்தலும்.**—சித்தியெய்தும் பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கை அரசாங்க செய்திமடலில் வெளியிடப்படும். தகுந்த வெற்றுப் பதவிகள் ஏற்படும்போது அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும்.

**17. மருத்துவப் பரீட்சை**—தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் இலங்கையில் எப்பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடனலமுடையவரெனக் காட்டுவதற்கு வைத்தியப் பரீட்சையொன்றில் தேறுமாறு வேண்டப்படுவர்.

**18.** இப்பிரமாணங்களில் ஏற்பாடு செய்யப்படாத எந்த விடயத்தையும் திறைசேரி இணைப் பிரதிச் செயலாளர் தமது தற்றுணிபுப்படி தீர்த்துவைப்பார்.

பி. டி. உடுவெல,
திறைசேரி இணைப் பிரதிச் செயலாளர்.

பொதுத் திறைசேரி, கொழும்பு
1970 ம் ஆடு ஏப்பிரல் மீ 29 ந உ.

## மாதிரி விண்ணப்பப் பத்திரம்

**பரீட்சைத் திணைக்களம், இலங்கை**

சுட்டிலக்கம் : ————.

**மொழிபெயர்ப்பாளர் சேவையில் ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை —யூலை 1970**

1. குடும்பப் பெயர், முதலெழுத்துக்களுடன் : ————.

பால்

2. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்பட்ட பெயர்கள் : ————.
3. முழு அஞ்சல் முகவரி : ————.
   (அரசாங்க சேவையிலுள்ளோர் தங்கள் அலுவலக முகவரியைக் கொடுத்தல் வேண்டும்).
4. மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்) அல்லது மொழிபெயர்ப்பாளர் (தமிழ்) பதவிகளுக்கான வெற்றிடங்களுக்குப் போட்டியிட விரும்புகின்றீராவெனக் கூறுக : ————.
5. தகவுத்திறன்—
   (அ) பிறந்த திகதி : ————.
   (ஆ) கல்வித் தகைமை : ————.
   (இ) இலங்கைக் குடியாவென்பதுவும் ; அவ்வாறாயின் பரம்பரையினாலா, பதிவினாலா என்பதுவும் : ————.
   (ஈ) உமக்குப் பொருத்தமான தகவுத்திறன் சார்ந்த பிற விபரங்கள் : ————.
6. ஏலவே அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் பின்வரும் தகவல்களைத் தருதல் வேண்டும் : ————.
   (1) நீர் தற்போது வகிக்கும் பதவி : ————.
   (2) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட தேதி : ————.
   (3) அப்பதவியில் நீர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா ? : ————.
   (4) அப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரிமையுடையதுமானதா அல்லது தற்காலிகமானதா ? : ————.
   (5) அரசகரும மொழிக் கொள்கை நோக்கத்திற்காக நீர் " முன்னர்ச் சேர்ந்தவரா " அல்லது " புதிதாகச் சேர்ந்தவரா " ? : ————.
   (6) உமது குடியியல் நிலை : ————.
   (7) நீர் திருமணமானவராயின், பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கை : ————.
7. (i) எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் நான் தந்துள்ள கூற்றுக்கள் யாவும் உண்மையானவையெனவும் நான் ஒட்டும் முத்திரைகள் உண்மையானவையெனவும் அவை முன்னர் உபயோகிக்கப்படவில்லையெனவும் எனது நேர்மையின் பேரில் நான் உறுதிப்படுத்துகின்றேன் : ————.
   (ii) இப்பரீட்சைக்குரிய பிரமாணங்களுக்கிணங்கியொழுக நான் உடன்படுகின்றேன்.
8. முத்திரைகளுக்கான கூண்டு (முக்கியம்)—பரீட்சார்த்தி இங்கு 25 ரூபா பெறுமதியான முத்திரைகளை ஒட்டி, அவைமீது தமது கையொப்பத்தையும் தேதியையும் இட்டு அவைகளை அழித்தல் வேண்டும். முத்திரைகளை ஒன்றன்மீதொன்றாக ஒட்டலாகாது.

ரூபா 25

————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

தேதி : ————.

9. பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்.

*——————வசிப்பவரும்/வேலை பார்ப்பவரும், என்னால் நன்கு அறியப்பட்டவருமாகிய—————— என்பவர் 1970 ஆம் ஆண்டு——————மாதம்———ஆம் தேதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தையிட்டாரென நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

————————,
(அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்)

பெயர், பதவிப் பெயர், நிலை :———————.

முகவரி : ————.

*தற்பொழுது அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பதாரரொருவரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் அவரது திணைக்களத் தலைவரினால் அல்லது அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தரினால் செய்யப்படுதல் வேண்டும்.

### திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

இப்பரீட்சார்த்தி 5 ஆம் 6 ஆம் கூடுகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரிபார்க்கப்பட்டுச் சரியெனக் காணப்பட்டுள்ளனவெனவும் எல்லாவகையினும் அவரது வேலையும் நடத்தையும் திருத்தியாய் இருந்தன/இருக்கின்றன எனவும், பொருத்தமான செய்திமடல் அறிவித்தலின் பிரகாரம் அவர் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகவுடையவரெனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

தெரிவு செய்யப்பட்டால், அவரது தற்போதைய பதவியிலிருந்து அவர் விடுவிக்கப்படுவார்.

————————,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவிப் பெயர் : ————

தேதி : ————.

## பரீட்சைத் திணைக்களம், இலங்கை

### பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :————.

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்து விடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சாதிகாரிகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குப்பட்டதாகும்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணுது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சாத்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தை தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ் விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப்பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய் மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வெறெந்த இடத்திலோ எழுதக் கூடாது. இவ்விதிக்கு முரணுக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுதப்படவோ கூடாது பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல விடயங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனே செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அழகிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினேடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப் பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப் பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகுசெய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள், முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந் நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

**13.** தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்பட மாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

**14.** பிறபரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருநதோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக் கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

**15.** பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

**16.** பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளை கவனித்தல் வேண்டும் :—

**(i)** ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கும் முன் நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

**(ii)** ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதியைப் பற்றியோ ஐயமேது மிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்கு தோற்றும் தகைமை நிராசரிக்கப்படக் கூடும்.

**(iii)** நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்திற்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

**(iv)** சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத் தாள், கணனரேகைத் தாள், பேரேட்டுத் தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாக கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவறறையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும். சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

**(v)** விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்படவேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும் அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

**(vi)** உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலது பக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

**(vii)** எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள், கோட்டுரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும், பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டுரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமோனால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

**(viii)** ஒவ்வொரு படத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல்மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

**(ix)** வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

**(x)** உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளிடமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.

**(xi)** மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு–2,

கே. ஜி. டபிள்யூ. சுமனசூரியா,
பரீட்சை ஆணையாளர்.

5–43—8.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905

---

## அளவையியலிலும் மட்டமாக்கலிலும் பரீட்சை

நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கான நில அளவையும் மட்டமாக்கலிலும் சம்பந்தமான வருடாந்தப் பரீட்சை எழுத்து, செய்முறை ஆகிய இரு பகுதிகளிலும் நடாத்தப்படும். எழுத்துப் பரீட்சை 1970 ம் ஆண்டு ஜூலை மாதம் 19 ம் திகதியும் செய்முறைப் பரீட்சை 1970 ம் ஆண்டு ஆகஸ்து மாதம் 17 ம் திகதியும் ஆரம்பமாகும்.

**2.** எழுத்துப் பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும். செய்முறைப் பரீட்சை கொழும்பு மாவட்டத்தின் எப்பகுதியிலாவது நடாத்தப்படும்.

**3.** (அ) இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு, பிரமாணங்களுக்கு அமைய விதித்த விண்ணப்பப் பத்திரங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். இவ் விண்ணப்பப்பத்திரங்களைக் கொழும்பு 5, கிருல வீதியில் உள்ள நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(ஆ) விண்ணப்பத்துடன் கீழ்வரும் சான்றிதழ்களின் மூலங்கள் இணைக்கப்படல் வேண்டும் :—

**(1)** கணிதசாஸ்திரத்துடன் (Mathematics) சித்தியெய்திய சிரேஷ்ட தராதரப் பத்திரம் (ஆங்கிலம்) பரீட்சையின் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான சான்றிதழ் அல்லது அதற்கு உயர்தரமான பரீட்சையில் சித்தியெய்தியமைக்குரிய சான்றிதழ்.

**(2)** இலங்கை நுண்தொழில் நுட்பக் கல்லூரியில் அல்லது முறையாக உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர் அல்லது மட்டமிடுபவர் அல்லது நில அளவையாளரும் மட்டமிடுபவரிடம் நில அளவையில் அல்லது மட்டமாக்கலில் அல்லது நில அளவையிலும் மட்டமாக்கல்களிலும் பரீட்சைக்கு முன் ஆகக் குறைந்தது ஓராண்டாவது பரீட்சார்த்தி கற்றதாகக் கூறும் சான்றிதழ்.

குறிப்பு.—கணித சாஸ்திரம், ஆங்கிலம், சிங்களம்/தமிழ் உட்பட வேறும் மூன்று பாடங்களுடன், இரு தருணங்களுக்கு மேற்படாத பரீட்சைகளில் சித்தியெய்திய, பொதுக் கல்வி தராதரப் பத்திரம் (சாதாரண நிலை) சிரேஷ்ட தராதரப் (ஆங்கிலம்) பத்திரத்துக்குச் சமமாகக் கருதப்படும்.

4. பரீட்சார்த்திகள் விண்ணப்பம் ஏற்கும் முடிவு தேதிக்கு முன்பு ாவது 1970 ம் ஆண்டு மே மாதம் 24 ம் திகதிக்கு முன்பதாக க்காணும் பரீட்சைக் கட்டணங்களை நில அளவையாளர் நாயகமவர் டம் செலுத்தல் வேண்டும் :—

| | | ரூபா |
|---|---|---|
| நில அளவைப் பரீட்சைக்கு மட்டும் | .. | 30 |
| மட்டமாக்கல பரீட்சைக்கு மட்டும் | .. | 30 |
| நில அளவையும் மட்டமாக்கலும் பரீட்சைக்கு | .. | 50 |

5. எழுத்துப் பரீட்சைக்குரிய பாடங்கள் பின்வருமாறு :—

(அ) ஆங்கிலம்—ஒரு கேள்வித்தாள்—பரீட்சார்த்தியின் ஆங்கில அறிவையும் ஆதிக்கத்தையும் அளவிடுதற்கான கேள்விகளிலும் கட்டுரையிலும் பயிற்சி.

(ஆ) எண் கணிதமும் அட்சரகணிதமும்—ஒரு கேள்வித்தாள்.
எண்கணிதம்—முழு இலக்கங்களுக்கும் பொதுப் பின்னல்களுக்கும் தசமப் பின்னஙகளுக்கும் பயன்படும் எண்கணிதத்தின் தத்துவங்களும் செயமுறையும். மீற்றர் அளவுமுறை. குறிக்கப்பட்ட திருத்தத்தின் அளவுக்குக் கிட்டத்தட்டச் சரியாக்கல். தசமங்களினதும் விகிதங்கள், விகிதசமன்களினதும் பெருக்கல் பிரித்தற் சுருக்க முறைகள். நூற்றுவீதம், சராசரிகள். எண்கணிதத்தின் செய்முறைப் பிரயோகம்.

அட்சரகணிதம்—எண்கணித அட்சரகணித விதிகளது பொது முடிபுகளின் குறியீட்டுக் கோலையும் அவற்றின் பிரயோகமும். எளிய, ஈருறுப்பு, இருபடிக்கோவைகளின் காரணிகள் (மூலக்கூறுகள்). முதற்படி அல்லது இரண்டாம்படிச் சமன்பாடுகளும் அவற்றுக்கு வழிகாட்டும் பிரச்சினைகளும். வர்க்கமூலம். எளிய விகித முறுகின்ற முழு வெண்ணுக்குரிய அட்சரகணிதச் செயற்கூறுகளை காட்டும் வரைபுகள். கூட்டல் விருத்தியும் இசையிடை விருத்தியும். பெருக்கல் விருத்தி. சுட்டிகளினதும் மடக்கைகளினதும் அறிமுறையும் மடக்கை வாய்பாட்டுப் பயன்பாடும். ஒரு நேரான முழு வெண்ணுக்குரிய சுட்டியின் ஈருறுப்பு அறிமுறை.

(இ) கேத்திர கணிதமும் திரிகோண கணிதமும்—ஒரு கேள்வித் தாள்.
கேத்திர கணிதம்—ஒப்பிடத்தக்க நீளம் கொடுக்கப்பட்டுள்ள அடித்தளங்களையும் குறுதுயரங்களையும் கொண்ட முக்கோணங்களினதும் இணைகரங்களினதும் பரப்புகளையும் இலகுவான ஒழுக்குகளையும் சேர்த்து எளிய உய்த்தறிதல்களை விளக்கும் ஊக்கிளிட் ((i)—(iv)) இன் பாடங்கள். (கேத்திர கணிதத் தேற்றங்களுக்குரிய எல்லா நிறுவல்களும் கேத்திரகணிதச் சார்பானதாயிருக்க வேண்டும். ஊக்கிளிட்டினுடைய நிறுவல்கள் வற்புறுத்தப்படமாட்டா). இயல்பொத்த உருவங்கள், வட்டத்தின் அளவியல். கனம், நீள்சதுரக்கண்டம், நான்முகி, கோளம், உருளை, ஆப்பு, கூம்பகம், கூம்பு எனப்படும் எளிய திண்டி உடல்களின் அளவியல்.

திரிகோணகணிதம்—முக்கோணங்களின் தீர்வும் அதுவரையுள்ள பகுதியும் (முக்கோணங்களின் செய்முறைத் தீர்வுகளையும் அவற்றின் பிரயோகங்களையும் சேர்த்து). மடக்கை வாய்பாட்டினதும் பிறவாய்பாடுகளினதும் பிரயோகத்தை உள்ளடக்கும் எண்ணுதாரணங்கள்.

(ஈ) அளவையியல்—ஒரு கேள்வித்தாள்—சங்கிலியளவை.
திருன்சிற்தியொடயிற்களும் இறேடிள் தியொடவியற்களும், அவற்றின் பிரயோகமும், அவற்றைச் சீர்ப்படுத்தும் முறைகளும். தளச் செவ்கோண ஆனகூறுகள், வளைகோட்டு வீச்சீடு, எதிரமைமுறைகள் தக்கியோகமானம் முதலியவற்றின் பயன்களையும் காட்டும் தியொடலயிற்போகுகளும் திசைகாட்டிப் போகுகளும். தளமேசை அளவை. தனமுக்கோணவாக்கம். வானியல் நோக்கல்களினால் திசைவில்லைக் கணித்தல்.

(உ) மட்டமாக்கலியல்—ஒரு கேள்வித்தாள்.
டம்பி மட்டமும், " Y " மட்டமும் குக்கின்பின் திருப்பும் மட்டமும் அவற்றின் பிரயோகமும் அவற்றைச் சீர்ப்படுத்தும் முறைகளும். மட்டமாக்கலின் அறிமுறையும் செய்முறையும். மண் வேலையைக்கணித்தல். புகையிரதப்பாதை அளவைகளும் தெரு அளவைகளும், அவற்றைத் தரையிற் குறித்தலும். நீர் விநியோகத்திற்கான அளவைகள். உரு வரைகளும், அவற்றிலிருந்து, அவற்றால் அடக்கப்பட்ட பகுதிகளைக் கணிப்புச் செய்தலும்.

கேள்வித்தாள்கள் (அ), (ஆ), (இ) களில் தேர்ச்சியடைவதற்குரிய புள்ளிகளின் நூற்று வீதம் ஒவ்வொரு பாடத்திற்கும் 40 ம், மொத்தச் சராசரி 50 ம் ஆகும். (ஈ), (உ) ம் கேள்வித்தாள்களில் தேர்ச்சியடைவதற்கு 60 வீதம் புள்ளிகள் பெறல் வேண்டும்.

6. நில அளவைப் பரீட்சைக்கு மட்டும் தோற்றும் பரீட்சார்த்திகள் (அ) தொடக்கம் (ஈ) வரையுள்ள பாடங்களில் சித்தியெய்த வேண்டும். மட்டமாக்கல் பரீட்சைக்கு மட்டும் தோற்றும் பரீட்சார்த்திகள் (அ) தொடக்கம் (இ) வரையுள்ள பாடங்களிலும் (உ) விலும் சித்தியெய்தல் வேண்டும்.

7. எழுத்துப் பரீட்சையில் சித்திபெருத பரீட்சார்த்திகள் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றுமாறு அழைக்கப்படமாட்டார்கள்.

8. எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்திய பரீட்சார்த்திகட்கு செய்முறைப் பரீட்சைக்கான நேரமும் இடமும் உரிய காலத்தில் அறிவிககப்படும். இப்பரீட்சை எழுத்துப் பரீடசையின் நில அளவையினதும் மட்டமாக்கலினதும் பாடத்திட்டங்களுக்கமைய நடைபெறும்.

9. பரீட்சார்த்திகள், பரீட்சகர் குறிக்கும் நேரங்களுள் வெளிக்கள வேலைகள் செய்வதோடு சீரான நிலையில் உள்ள உபகரணங்களையும் கொண்டு வருதல் வேண்டும். திருப்தியற்ற வேலைகட்குச் சீரற்ற உபகரணங்களை ஒரு காரணமாகக் கொள்ள முடியாது. பரீட்சை நேரத்தில் எவருடனுவது தொடர்பு கொள்ளக் காணப்படும் பரீட்சார்த்திகளின் தகைமை நீக்கப்படும்.

10. எல்லாப் பரீட்சார்த்திகளும் தங்கள் சொந்த உபகரணங்கள், கம்பங்கள், முனைகள், வரைதற் பலகைகள், வரைதற் பொருட்கள், எழுது கருவிவகை ஆகியனவற்றையும் தொழிலாளர்களையும் கொண்டு வருதல் வேண்டும். எழுத்துப் பரீட்சைக்கோ அல்லது செய்முறைப் பரீட்சைக்கோ எதுவிதத்திலும் உதவி அளிக்கப்படமாட்டாது.

11. 1970 ம் ஆண்டு மே மாதம் 24 ந் திகதிக்குப் பின்பு கிடைக்கும் எந்த விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

12. (அ) சகல பரீட்சார்த்திகளும் எழுத்து, செய்முறை ஆகிய பரீட்சைகளில் ஒவ்வொரு பாடமும் பரீட்சிக்கப்படுவதற்கு முன்பு மேற்பார்வையாளர் திருப்திப்படுமாறு தமது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காகக் கீழ்கொடுக்கப்படும் ஏதாவதொரு சாசனம் அங்கீகரிக்கப்படும் :—

(1) தபாற் கந்தோர்களின் தலைமை அதிபதியால் வழங்கப்படும் அடையாள அட்டை,

(2) இப்பரீட்சைத் திகதிக்கு முன் மூன்று வருடத்திற்கு உட்பட்ட காலத்தில் வழஙகப்பட்டதும் செல்லுபடியாகக் கூடியதுமான ஒரு பிரயாண அனுமதிச் சாசனம் (பாஸ்போட்),

(3) இப்பரீட்சை நிகழும் திகதிக்கு முன் மூன்று வருடத்திற்குள் ஓர் அரசாங்கப் பகுதியின் அதிகாரத்தோடு வழங்கப்பட்டதும், அதற்குரியவரது புகைப்படத்தைக் கொண்டதுமான ஏதாவதொரு அத்தாடசிப்பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது பிற சாசனம்.

(ஆ) மேற் குறிக்கப்பட்ட (அ) வில் பந்தியில் குறிப்பிட்ட எந்த ஒரு சாசனம் மூலமாவது தமது அடையாளத்தை நிரூபிக்கத்தவறும் எந்தப் பரீட்சார்த்தியும் அவர் தோற்றும் எழுத்து, செய்முறை பரீட்சையில் ஒரு பாடத்திலாவது பரீட்சிக்கப்படுவதற்குத் தகுதியற்றவராவர்.

13. (அ) எக்காரணங்கொண்டும் கட்டுப்பணம் திருப்பிக்கொடுபட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்திகள் தகுந்த காரணத்தைக்காட்டி பரீட்சையிலிருந்து விலகுவதான அறிவித்தலை 6.7.1970 ல் அல்லது அதற்குமுன்னர் இக்காரியாலயத்துக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பினுல், அடுத்து நடைபெறவிருக்கும் பரீட்சைக்குக் கட்டுப்பணமின்றித் தோற்ற அனுமதியளிக்கப்படுவர்.

(இ) பரீட்சார்த்திகள் தகுந்த காரணத்தைக்காட்டியோ, அல்லது சுகவீன காரணத்தாலோ (வைத்திய அத்தாட்சிப்பத்திரத்தால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்) பரீட்சையிலிருந்து விலகுவதான அறிவித்தலை 6.7.1970 ற்குப் பின்பும் பரீட்சை ஆரம்பத்திகதிக்கு முன்பும் இக்காரியாலயத்திற்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பினுல் கட்டுப்பணத்தின் அரைப்பங்கைக் கட்டி அடுத்து நடைபெறவிருக்கும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

(ஈ) பரீட்சார்த்தியின் கட்டுப்பணம் சம்பந்தமாக (ஆ), (இ) வில் குறிப்பிட்டுள்ள சலுகைகள் தவறினுல் அல்லது பரீட்சைக்குத் தோற்ற முடியாத காரணத்தைப்பற்றிய அறிவித்தலைப் பரீட்சை ஆரம்பத்திற்கு முன் அறியத்தராமலிருந்தால் அவர்களின் கட்டுப்பணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

14. இது சம்பந்தமான சகல தொடர்புகளும் நில அளவையாளர் நாயகத்துக்கே விலாசமிடப்பட வேண்டும் ; எனக்குத் தனிப்பட்ட முறையில் அல்ல.

சீ. ரீ. குணவர்தன,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவைத் திணைக்களம்,
கிளை, " புறேக்/சீஈ.",
இருல வீதி,
த. பெ. எண் 506,
கொழும்பு 5,
1970 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 20 ந் வ.

5-1060—8.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905

## அரசகரும மொழித் திணைக்களம்

### சிங்களச் சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புகள்

அரசகரும மொழித் திணைக்களத்தினால் நடாத்தப்படவிருக்கும் மேற்படி பயிற்சி வகுப்புகளிற் சேர்வதற்குத் தகைமையுடைய ஆண், பெண் ஆகிய இரு பாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த வகுப்புகள் ஏறத்தாழ ஒரு வருடம் தொடர்ந்து நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது ; வகுப்புக்கள் கொழும்பில் அலுவலக நேரங்களில் நடைபெறும். ஏறத்தாழ 40 பயிற்சியாளருக்கு இடமுண்டு.

2. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின்வரும் தகைமைகளேயுடையர் என்பதற்குச் சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) இலங்கையராயிருத்தல் வேண்டும், (பரம்பரை வழியாக அல்லது பதிவு பெற்று இலங்கைப் பிரசையானவரே "இலங்கையர்" எனப்படுவர்) ;

(ஆ) (i) இலங்கைச் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும் ; சிங்களத்திலும், எண்கணிதம், ஆரம்பகணிதம், வர்த்தக கணிதம் ஆகியவற்றுள் ஒன்றும் உட்பட நான்கு பாடங்களில் திறமைத் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது

(ii) கல்விப் பொது தராதரச் சான்றிதழ் (சாதாரண தரம்) பெற்றிருத்தல் வேண்டும் ; ஆறு பாடங்களில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன் சிங்களத்திலும், எண்கணிதம் தூயகணிதம், ஆரம்ப கணிதம், வர்த்தக கணிதம் ஆகியவற்றுள் ஒருபாடம் உட்பட நான்கு பாடங்களில் திறமைத் தேர்ச்சியடைந்திருப்பதுடன் ஒரே முறையில் குறைந்தது ஐந்து பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் ;

(iii) மேற்கூறப்பட்ட (i), (ii) ஆகியவற்றிற்குச் சமமான ; அல்லது அவற்றிற்கு மேலான பரீட்சைச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) 31.5.70 அன்று 17 வயதுக்குக் குறையாதவராயும் 22 வயதுக்கு மேற்படாதவராயுமிருத்தல் வேண்டும் ;

(ஈ) சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயுமிருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பகாரர் கொழும்பில் நடைபெறவிருக்கும் ஒரு நேர்முகப் பரீட்சைக்கு அல்லது சோதனைக்குச் சமூகமளித்தல் வேண்டும் ; அவற்றிற்காகிய காலமும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும். பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டா. விண்ணப்பத்திலுள்ள விவரங்களில் ஏதுவாயினும் பிழையாகவிருப்பது தெரிவுக்குமுன் காணப்படின் விண்ணப்பகாரர் தெரிவுக்குரிய தன் தகைமைகளை இழப்பர். தெரிவு செய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்படின் அவர் வகுப்பிலிருந்து நிறுத்தப்படுவதற்கு ஆளாவர்.

4. பயிற்சிக் காலத்தில் எவ்வகைப் படியாயினும் கொடுக்கப்படமாட்டாது. பயிற்சிக் கால முடிவில் பரீட்சை ஆணையாளரால் ஒரு தகுதிகாண் பரீட்சை நடத்தப்படும். அப்பரீட்சையிற் சித்தியடையும் பயிற்சியாளருக்கு ஒரு சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சி முடிந்ததும் இந்தத் திணைக்களத்திலோ, அரசாங்க சேவையிலோ தற்காலிகமாகவேனும், நிரந்தரமாகவேனும் வேலை கொடுக்கப்படுமென உத்தரவாதமளிக்க முடியாது.

5. பயிற்சிக் காலத்தில் காலத்துக்குக் காலம் சோதனைகள் நடத்தப்படும் ; அச்சோதனைகளின் பெறுபேறுகளின்படியே பயிற்சியாளர் தொடர்ந்து பயிற்சி பெற அனுமதிக்கப்படுவர். எப்பயிற்சியாளரினதும் வரவு, படிப்பு, பொதுத்தகுதி அல்லது நடத்தையில் இத்திணைக்களத்திற்குத் திருத்தியேற்படாவிடின் அன்னார் பயிற்சிக் காலத்தில் எந்நேரத்திலாயினும் உடனடியாக நீக்கப்படுதற்கு ஆளாவர். அவ்வாறு நீக்கப்பட்ட பயிற்சியாளர் எவராயினும் பின்னர்வரும் பயிற்சி வகுப்புக்களிற் சேர்வதற்குத் தகவுடையராகார். காலத்துக்குக் காலம் பிறப்பிக்கப்படும் பிரமாணங்கள், அறிவுறுத்துரைகள் ஆகியவற்றிற்கு அமைந்து நடப்பதாக ஒரு உடன்படிக்கை, அதற்கெனவுள்ள ஒரு படிவத்தில் எழுதிக் கையொப்பமிட்டுக் கொடுக்குமாறு ஒவ்வொரு பயிற்சியாளரும் வேண்டப்படுவர்.

6. பயிற்சியாளர் வேண்டுமென்று அசட்டை செய்தல், கவனமில்லாதிருத்தல் ஆகியவற்றின் விளைவாகக் களஞ்சியப் பொருள்கள் காணமற்போவதாலும் உபகரணங்கள் முதலியன சேதமடைவதாலுமேற்படும் நட்டத்தை ஈடு செய்வதன் பொருட்டு ஒவ்வொரு பயிற்சியாளரும், வகுப்பிற் சேரும்போது, ரூபா 100 பிணை, இரண்டு பிணைகாரர் மூலம் கொடுத்தல் வேண்டும்.

7. இவ்வகுப்புக்களிற் சேர்வதற்காகிய விண்ணப்பங்கள் கீழ்க்காணு மாதிரிப் படிவத்தில் விண்ணப்பகாரரின் சொந்தக் கையெழுத்தி எழுதப்பட்டு ஆணையாளர், அரசாங்க மொழி அலுவல்கள், த.பெ. 598 கொழும்பு 7, என முகவரியிட்டு, 1970 மே 31 அன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். இத்திகதிக்கு பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் ; ஆணையாள ரின் பெயருக்கு அனுப்பக்கூடாது.

பீற்றர் பீ. அபயசேகரா,
ஆணையாளர்,
அரசகரும மொழி அலுவல்கள்.

அரசகரும மொழித் திணைக்களம்,
22, நீட் வழி,
கொழும்பு 7,
1970 ம் ஆண்டு ஏப்பிறில் மீ 26 ந் உ.

### சிங்களச் சுருக்கெழுத்தாளர் பயிற்சி வகுப்பிற் சேர்வதற்காகிய விண்ணப்பம்

1. முழுப்பெயர் : ———.
(தெளிவாக எழுதுக)

2. முகவரி : ———.

3. தேசிய இனம் : ———.
(பரம்பரையான இலங்கையரா அல்லது பதிவுபெற்ற இலங்கையரா வென்பதைக் குறிப்பிடுக)

4. 31.5.70 அன்றுள்ள வயதும் பிறந்த தேதியும் : ———.
(பிறப்புச் சான்றிதழ் (ஒருபடி மாத்திரம்) இணைக்கப்படுதல் வேண்டும்)

5. ஆண்/பெண் : ———.

6. மணமானவர்/மணமாகாதவர் : ———.

7. சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சையும், பாடங்களும், திகதிகளுடன் : ———.

8. இலங்கைச் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ்ப் பரீட்சை அல்லது கல்விப் பொதுத் தராதரச் சான்றிதழ்ப் (சாதாரண தரம்) பரீட்சையில் திறமைத் தேர்ச்சியும் சாதாரணத் தேர்ச்சியும் பெற்ற பாடங்கள், (படிகளை இணைக்க, மூலங்களையல்ல, இன்னும் சான்றிதழ்கள் கிடைக்காவிட்டால் அவ்வாறு குறிப்பிடும் அதிபரின்/தலைமை ஆசிரியரின் சான்றிதழ் அல்லது வேறு செல்லுபடியான சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்) : ———.

9. கல்வி கற்ற இடமும் தேதியும் : ———.

10. சிங்களத்திற் பெற்ற விசேட தகைமைகள் உண்டாயின் அவை : ———.

11. சிங்கள/தமிழ்/ஆங்கில சுருக்கெழுத்திற் பெற்றுள்ள அனுபவம் : ———.

12. இப்பொழுது ஏதாவது தொழில் செய்வதாயின் அத் தொழில் : ———.

13. பெற்றோர்/பாதுகாவலர் பெயரும் முகவரியும் : ———.

14. இரு உசாவரின் பெயர்களும் பதவிப் பெயர்களும் : ———.

15. குணச்சான்றிதழ் வழங்கியவர்களின் பெயர்களும், பதவிப் பெயர்களும் (படிகள் மாத்திரம்) இணைக்கப்படுதல் வேண்டும் ; ஒரு சானறிதழ் கடைசியாகப் படித்த பாடசாலைத் தலைமை ஆசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் : ———.
(மூன்று சான்றிதழ்கள்)

16. வேறு தகைமைகள் உண்டாயின், அவை : ———.

———,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ———.

5-1096—8.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை மின்சாரச் சபை

**...மேல் மஸ்கேலிய ஓயா திட்டம் I இன் கீழ் செலுத்தல் கோடு பராமரிப்பு குடிமனைகள் கட்டுவதற்கு கேள்விப் பத்திரங்கள்**

...70 ம் ஆண்டு யூன் மாதம் 13 ம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ...ழும்பு 2 (த. பெ. இல. 540) இலங்கை மின்சாரச் சபையின் கேள்விச் ...த் தலைவரால் மேற்கூறிய வேலைக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் ...ாள்ளப்படும்.

2. கேள்விக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் சேர் சிற்றம்பலம் ...டினர் மாவத்தையிலுள்ள கொந்திராத்து–சப்ளை இஞ்சினியரின் ...ரியாலயத்தில் பார்வையிடக் கிடைக்கும். கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் ...பா 100 உம், கிரையம் ரூபா 5 உம் வெவ்வேறாக இலங்கை மின்சாரச் ...பை சிருப்பரிடம் கட்டப்பட்டு அவரிடமிருந்து பெற்றுக் கொண்ட 2 ...ற்றுச் சீட்டுக்களை கொந்திராத்து–சப்ளை இஞ்சினியர் காரியாலயத்தில் ...ட்டி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி ...பந்தனைகளின்படி கட்டுப்பணமாகிய ரூபா 100 உம் திருப்பிக் ...காடுக்கப்படும்.

3. பொதுவேலைத் திணைக்களம் அல்லது வேறு அரசாங்க திணைக் களங்களிலோ அல்லது அரசாங்க கூட்டுத்தாபனங்களிலோ ரூபா 100,000 க்கு குறையாத கட்டிட வேலைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் மட்டுமே பதிவு அத்தாட்சி காட்டி விண்ணப்பிக்கலாம்.

4. மேற்கூறியபடி பெற்றுக் கொண்ட பத்திரங்களில் மாத்திரம் கேள்விகள் (இரண்டு பிரதி) அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு யூன் மாதம் 9 ம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை வழங்கப்படும்.

5. 1970 ம் ஆண்டு யூன் மாதம் 13 ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மேற்படி கேள்விச் சபைத் தலைவர் காரியாலயத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கும் பொழுது கேள்விக் காரர்கள் சமூகமாயிருக்கலாம்.

ரீ. டபிள்யூ. மெண்டிஸ்,
பொது முகாமையாளர்,
இலங்கை மின்சாரச் சபை.

த. பெ. இல. 540,
கொழும்பு,
1970 ம் ஆண்டு மே மீ 8 ந உ.

5–30—8.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905.

---

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவுக்கு துறைமுகத் தொழிற் களஞ் சியம் இருக்கும் இடத்தில் 4" தண்ணீர் பம்புகள் இரண்டு இருப்பி லிருந்து வழங்குவதற்கு உள்ளூர் விற்பனையாளர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்களைக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு கேள்விச் சபைத் தலைவர் 1970 ஜூன் 2ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக் கொள்வார்.

1970 ஜூன் 2ம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப் பத்திரங் கள் திறக்கப்படும் பொழுது கேள்வியாளர்கள் சமூகமளிப்பதற்கு அனு மதிக்கப்படுவார்கள்.

கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப விரும்பாத கேள் வியாளர்கள் கேள்விச் சபைத் தலைவரால் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத் தரிடம் கேள்விப்பத்திரங்களை நேர்முகமாகக் கொடுத்து அவைகளை அவர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புக்கூற்றை எழுத்து மூலம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது அவர் நேர் முகமாக வந்து தங்களின் கேள்விப் பத்திரங்களை இத்திணைக்கள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்த மான சாதனங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப் பணமாக ரூபா. 100 க்கு கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு சிருப்பர் வழங்கிய பற்றுச்சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணை யாளாருக்கு விண்ணப்பஞ் செய்வோருக்குக் கேள்விப் பத்திரப் படிவங் கள் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணம் கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப திருப்பிக் கொடுக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் இருத்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான சாதனங்கள் 1970 மே 31 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

எல். எஸ். த சில்வா,
கப்பற்றுறை ஆணையாளர்க்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
8.5.1970.

5–109—8.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905

---

## கமத்தொழில் திணைக்களம்

**அரசாங்கப் பண்ணைகளுக்கு புளி மாம்பழங்கள், சோடிக் கிடுகுகள் விநியோகித்தல் பாரம்கொடுத்தல் ஆகிய வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன**

மேற்கூறப்பட்ட வேலைகளுக்கான சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1970.5.30 ஆம் திகதி மு. ப. 10.00 மணி வரையும் யாழ்ப்பாணம் கமத் தொழில் (பண்ணை முகாமையும் ஆக்கமும்) கந்தோரில் கமத்தொழில் அதிகாரியால் ஏற்றுக் கொள்ளப்படும்.

(அ) பூச்சிகளால் சேதப்படுத்தப்படாத புளி மாங்கொட்டை விதைகள் விநியோகித்தல் பாரங்கொடுத்தல் :

(i) வவுனியா கமத்தொழில் பண்ணைக்கு 14,000 புளி மாங் கொட்டை விதைகள். மூன்று முறையில் விநியோகித் தல் வேண்டும் ;

(ii) திருகோணமலை கமத்தொழிற் பண்ணைக்கு 3,000 புளி மாங்கொட்டை விதைகள்.

விநியோகித்தல் பாரங்கொடுத்தல் 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 15 ம் தேதி ஆரம்பித்து 1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதியிலோ அல்லது அதற்கு முன்போ முடிவடைதல் வேண்டும். பழுதடையாத விதைக்கு மட்டுமே பணம் கொடுக்கப்படும். 100 கொட்டைகளுக்கு அற விடும் தொகையே குறிப்பிட வேண்டும்.

(ஆ) சோடிக் கிடுகுகள் விநியோகித்தல் பாரங்கொடுத்தல்.

கமத்தொழிற் பண்ணை முருங்கன்— 4,000

கோரப்படும் சோடிக்கிடுகுகளின் அளவுகள் நீளம் 6 அடிக்கு மேலும் பின்னல் அகலம் 13 அங்குலத்திற்கு மேலும் இருத்தல் வேண்டும். விநியோகித்தல் பாரம் கொடுத்தல் 31.7.70 ம் திகதியிலோ அதற்கு முன்னரோ முடிவடைதல் வேண்டும். தேவைப்படும் திகதி பண்ணை முகாமையாளரால் அறிவிக்கப்படும். அறவிடும் தொகை 100 சோடிக்கிடு குகளுக்கு கணக்கிட வேண்டும்.

2. மேற்கூறப்பட்ட நிலையங்களிலும் செய்யும் வேலைகள் சேவைக ளுக்கு வெவ்வேறான கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப் பத்திரங்களுக்கும் ரூபா 10/- வைப்புப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) , யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திர மும் இரு பிரதிகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு சீல்போட்ட தபால் உறையுள் வைத்து, கமத்தொழில அதிகாரி (ப. மு. ஆ.) கமத்தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப் பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பாவிட்டால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோருக்கு (ப. மு. ஆ.) கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சென்று சீல் வைத்த உறைகளை இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங் களடங்கிய தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர்க் குறிப்பு, "

(சேவையின் பெயரும் நிலையமும் கொடுக்கப்பட வேண்டும்), ஆகிய வேலைகளுக்கான கேள்விப்பத்திரம் " என்று குறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்த்தபின் அவை கிடைத்தமை பற்றிய உறுதிப்பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விக்காரருக்கும் அனுப்பப்படும். கேள்விப்பத்திரம் கோரும் முடிவுத் திகதிக்குப் பின்னர் நான்கு நாட் களுக்குள் உறுதிப்பத்திரம் கிடைக்காத கேள்விக்காரர் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில், கமத்தொழில் அதிகாரியுடன் (ப. மு. ஆ.) தொடர்பு கொள்ளவேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் வைப்புப்பணமாகக் கட்டிப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன் தினம் பகல் 12 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச்செயலகங்களிலும் அல்லது கமத்தொழில் இலாகா பேராதனையில் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்த 10

நாட்களுக்குள் கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் தனது கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை இழப்பதுடன் தாமத வேலை செய்யும் கொன்தராத்துக் காரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக எந்தவிதக் கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ள மாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர்களினால் கொடுக்கப்படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்கத் தவறின ஒப்பந்தத்தில் கூறியவாறு நஷ்ட ஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விப்பத்திரகாரர் விரும்பின் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் பிரசன்னமாகலாம். யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் (ப. மு. ஆ) கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். திறக்கப்படும் நேரமும் திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்வித் தொகையும் மொத்தமும் மையினால் தெளிவாக எழுதப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப்பத்திரக்காரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமான பெயர், முகவரி ஆகிய வற்றை பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையின் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின்னரே திருப்பித்தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப்பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய்யாமலோ குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தியாக்காமல் இருந்தாலோ அவரது கொந்தராத்தை முடிவுறச் செய்யும் அதிகாரம் கமத்தொழில் அதிபருக்குண்டு. இப்படியான சந்தர்ப்பத்தில் கொந்தராத்துக்காரரின் செலவில் அவ்வேலையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்குகள் செய்வதற்கு கமத்தொழில் அதிபர் உரிமையுடையவராவார்.

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுதையுமோ சிலபகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப்பட்ட பயிற்றப்படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்துதல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேள்விப்பத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவார். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவுற்பத்தி மந்திரியின் எழுத்து மூல அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே இலங்கையரலலாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெறாது இலங்கையரல்லாது ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழிகோலும்.

" இலங்கையர் " என்னும் பதம் இலங்கையின் வம்சாவழியினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

அமைய ஊழியர்களின் தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய்யப்படும் சம்பள சட்ட திட்டங்களுக்கமைய இக்கொந்தராத்தில் வேலை பார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். கமத்தொழில் அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில் இலாகாவில் வேலைபார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலை சம்பந்தமான புத்தகங்கள், சம்பளப்பட்டியல், வரவுப்பட்டியல் ஆகிய தஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரக்காரருக்கு நேரடியாக, அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

15. 1934 ம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன் கீழ் தொழிலாளரினால் செய்யப்படும் அரசாங்கத்தைப் பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்தராத்துக்காரரே பொறுப்புடையவராவார்.

16. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்பதற்கு அரசாங்கத்துக்கு உரிமையுண்டு.

17. குற்றப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ அல்லது கூட்டாகவோ கேள்விப்பத்திரங்கள் கோரின் அவர்களுடன் கமத்தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்து கொள்ளமாட்டார்.

18. மேலும் விவரங்கள் தேவைப்படின் ஒவ்வொரு பண்ணைகளுக்கு முரிய அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எம். எல். சி. இலங்ககோன்,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர் (க. க. வும் ப).

பேராதனை,
1970ம் ஆண்டு எப்பிரல் மீ 22 ந் வ.

5–1044—8.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905

---

## இலங்கை அரசாங்கப் புகைவண்டித் திணைக்களம்

இரத்மலானை வேலைத்தள ஊழியர்களுக்கு (சுமார் 4,000) "உடன் பணம் கொடுக்கும் விதி அடிப்படையில் " நாளாந்த உணவளிப்புப் பணியை நடத்துவதற்கான கேள்விகள் 1970, ஜூன் மாதம் 10 ந் திகதி புதன்கிழமை காலை 10 மணிவரை கோரப்படுகின்றன.

1970, ஜூன் மாதம் 7 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி வரை இரத்மலானை இ. அ. பு. தி, தலைமை இயந்திரப் பொறியியலாளர் அவர்களிடமிருந்து பெறப்பரலனவாய மாதிரிப் பத்திரங்களில் கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும். ஏற்கனவே தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளாத கரிசனையுள்ள கேள்வியாளர்கள் பின்வரும் விபரங்களைக் கொடுத்து பதிவு செய்து கொள்வதற்காக 1970, ஜூன் மாதம் 3 ந் திகதி புதன்கிழமையன்று அல்லது அதற்கு முன்னதாக, இரத்மலானை இ. அ. பு. தி, தலைமை இயந்திரப் பொறியியலாளர் அவர்கட்கு விண்ணப்பிக்க வேண்டும் :—

(அ) முன்னுள்ள அனுபவம், திறமை, நிதி ஸ்திரம் ஆகியவற்றைக் காட்டும் விவரணம்.

(ஆ) அரசாங்க ஒப்பந்தங்களை நிறைவேற்றியதை விவரமாகக் காட்டும் விவரணம்.

(இ) காணிச் சொத்தும் பிற சொத்துக்களும் எந்த மாவட்டத்தில் அல்லது எந்த மாவட்டங்களில் உண்டு என்பதைக் கொண்ட விவரணம்.

(ஈ) விண்ணப்பக்காரரின் பெயர் முடிக்குரிய தவறிய ஒப்பந்தக் காரர் நிரலில் இல்லை என்பதைக் கூறும் உறுதியுரை.

கேள்விக் கட்டுப்பணமாக ரூபா 25 ஒரு புகைவண்டி நிலையத்தில் கட்டி, அதற்குரிய பற்றுச் சீட்டினை கேள்விச் சாதனங்கள் பெறுவதற்கு முன்பு காட்டுதல் வேண்டும்.

சகல கேள்விகளும் இரட்டைப் பிரதிகளில் செய்யப்பட வேண்டும். கேள்விகளைக் கொண்ட கடித உறையின் பக்க மூலையில் "இரத்மலானை புகைவண்டி வேலைத்தள ஊழியர் உண்டிச் சாலைக்கு உணவளிக்கும் பணிக்கான கேள்விகள்" என்று எழுதப்படல் வேண்டும்.

கேள்வியாளர்கள் விரும்பினால் கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் சமூகம் அளிக்க அனுமதிக்கப்படுவார்கள். கேள்விகள் 1970 ஜூன் மாதம் 10 ந் திகதி புதன் கிழமை முற்பகல் 10.15 மணிக்கு, இரத்மலானை இ. அ. பு. தி. தலைமை இயந்திர பொறியியலாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

கேள்வியாளர்கள் கேள்விகள் முடிவடைந்த திகதியிலிருந்து ஆறு (6) கிழமைக் காலம் வரை தங்கள் கேள்விகளை ஏற்றுக் கொள்ளும் பொருட்டு காத்திருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் இரத்மலானை இ. அ. பு. தி, தலைமை இயந்திரப் பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இ. இராசகுலசூரியர்,
தலைமை இயந்திரப் பொறியியலாளர்,
இலங்கை அரசாங்க புகைவண்டித் திணைக்களம், இரத்மலானை.

1970 ம் ஆண்டு எப்பிரல் மீ 18 ந் வ.

5–11—8.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905

## கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா

காலி, படகன்வில மின்சக்தி நிலையத்தில் இணைப்பாறும் அறையொன்றை நிர்மாணிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் தலைவர், கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா, கொழும்பு 7, அவர்களால் 1970 ம் ஆண்டு வைகாசி 31 ந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப் படும்.

2. அரசாங்க இலாகாக்கள் ஏதாவதொன்றிலாவது கட்டிட வேலைக்கென ரூபா 25,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினைப் பதிவு செய்தவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்களைத் தாக்கல் செய்ய விரும்புவோர் ரூபா 100 ஐ வைப்புப்பணமாக இந்த இலாகாவிலாவது அல்லது கொழும்பு தவிர்ந்த வேறெந்தக் கச்சேரியிலாவது செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டையும் அத்துடன் பதிவட்டையையும் காண்பித்து 1970 ம் ஆண்டு வைகாசி மாதம் 30 ந் திகதி பகல் 12 மணிக்கு முன்னதாக கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

லுவி குணவர்த்தன,
பணிப்பாளர்,
கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா.

தொடர் இல. : டிஎ/டி/203,
கொழும்பு 7,
1970 ம் ஆண்டு சித்திரை 24.

5–7—8.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905

---

## கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா

பலான்கொடை மின்சக்தி நெசவு நிலையமொன்றினை நிர்மாணிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் தலைவர், கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா, கொழும்பு 7 அவர்களால் 1970 ம் ஆண்டு வைகாசி 31 ந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.—

2. பின்வரும் அரசாங்க இலாகாக்கள் ஏதாவதொன்றிலாவது கட்டிட வேலைக்கென ரூபா 1,00,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினைப் பதிவு செய்தவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் :

(1) பொது மராமத்து இலாகா
(2) நீர்ப்பாசன இலாகா
(3) புகையிரத இலாகா
(4) கல்வி இலாகா
(5) பிரதான பொதுச் சௌக்கிய பொறியியலாளர் இலாகா.

3. கேள்விப்பத்திரங்களைத் தாக்கல் செய்ய விரும்புவோர் ரூபா 100 ஐ வைப்புப்பணமாக இந்த இலாகாவிலாவது அல்லது கொழும்பு தவிர்ந்த வேறெந்தக் கச்சேரியிலாவது செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டையும் அத்துடன் பதிவட்டையையும் காண்பித்து 1970 ம் ஆண்டு வைகாசி மாதம் 30 ந் திகதி பகல் 12 மணிக்கு முன்னதாக கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

லுவி குணவர்த்தன,
பணிப்பாளர்,
கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா.

தொடர் இல. டிஎ/டி/202,
கொழும்பு–7,
1970 ம் ஆண்டு சித்திரை 24.

5–9—8.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905

---

## மோட்டார் நடமாட்டத் திணைக்களம்

### வாகன வேகமடக்கிப் பரிசோதனைக் கருவி ஒன்றைக் கொள்வனவு செய்து அகற்றுதலுக்கான கேள்விப்பத்திரம்

நாரஹென்பிட்டி ரோட், கொழும்பு 5 இல் உள்ள மோட்டார் நடமாட்டத் திணைக்கள எல்லைக்குள் பாவிக்க முடியாத வாகன வேகமடக்கிப் பரிசோதனைக் கருவி (பிறேக்ரெஸ்ரர்) ஒன்றைக் கொள்வனவு செய்து அகற்றுவதற்கு இதன் கீழ்க் கையொப்பமிட்டவரால் 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 8 ந் திகதி நண்பகல் 12 மணிவரை எழுதப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. இக்கந்தோரில் உள்ள தொழில் நுட்ப உதவியாளரின் முன்னேற்பாடுடன் கேள்விக்காரர் மேற்கூறப்பட்டுள்ள பொருளைக் கந்தோர் வேலை நேரங்களில் பார்வையிடலாம்.

3. எல்லாக் கேள்விப்பத்திரங்களும் முத்திரையாக்கிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் “ வாகன வேகமடக்கிப் பரிசோதனைக் கருவியைக் கொள்வனவு செய்து அகற்றுதலுக்காய கேள்விப்பத்திரம் ” என்று குறித்துப் பதிவுத் தபால் மூலம் மோட்டார் நடமாட்ட ஆணையாளர் த. பெ. இல. 533, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

4. ஏற்றுக் கொள்ளப்படும் முடிவு திகதியும், நேரமும் முடிந்த உடனேயே கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்.

5. தேர்வு பெற்ற கேள்விக்காரர் கேள்விப்பத்திர அனுமதி பெற்ற அறிவித்தல் கிடைத்த நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் முழுத் தொகையையும் செலுத்திப் பணம் செலுத்திய நாளிலிருந்து பதினைந்து நாளைக்குள் பொருளை அகற்றுதல் வேண்டும்.

6. “ வேகமடக்கிப் பரிசோதனைக் கருவியை ” சீமெந்திடப்பட்ட தரையை உடைத்தே அகற்றுதல் வேண்டும். தேர்வு பெற்ற கேள்விக்காரர் பரிசோதனைக் கருவியைக் கழற்றியவுடன் அதை அங்கிருந்து அகற்ற முன்பு திணைக்கள நிறைவிற்கிணங்க தரையைத் திருத்தியமைத்தல் வேண்டும்.

7. எழுதப்பட்ட கேள்விப்பத்திரத்துடன் கேள்விக்காரர் மீளப்பெறக் கூடியதான 50 ரூபா முற்பணமும் கட்டுதல் வேண்டும்.

8. மேலதிக விபரங்கள் இக்கந்தோரில் உள்ள தொழில் நுட்ப உதவியாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டி. ஆர். சி. ஹன்வெல்ல,
மோட்டார் நடமாட்ட ஆணையாளர்.

5—1094—8.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905.

---

## சௌக்கியத் திணைக்களம்

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1970 ம் ஆண்டு யூன் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1970 திசெம்பர் மாதம் 31 ந் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சௌக்கிய சேவை அத்தியட்சகர், அநுராதபுரம் ஏற்றுக்கொள்வார்.

2. **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியில் எனது பெயரில கட்டிப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவு செய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேற்குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை, இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை, கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்பவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சௌக்கிய சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

மேலே இரண்டாம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினல் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சௌக்கிய சேவை அத்தியட்சகர், அநுராதபுரம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்பட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம். அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப்பெட்டிக்குள் போடலாம். அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால், அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10 மணிக்கு இந்த காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்தபின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டு " பீ " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச்செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தின் அட்டவணை " சீ " யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிடவேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலைக்கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப்பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப் பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சி அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப்படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

எச். சீ. ஹுருகொட,
சௌக்கிய சேவை அத்தியட்சகர்.

அநுராதபுரம், 1970 ம் ஆடு ஏப்பிரில் மீ 24 ந் வ.

**குறித்த அட்டவணை**

| தாபனங்கள் | கேள்விக் கட்டுப் பணம் ரூபா | பிணை வைப்புப் பணம் ரூபா | கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் | உணவுகள் அண்ணளவான தொகைகள் — வேலைக்காரர்கள்: மீன் | மாட்டிறைச்சி | கருவாடு | காய்கறி | நோயாளிகள்: மீன் | மாட்டிறைச்சி | கருவாடு | காய்கறி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கெபிற்றிகொலவேவா பி.வி. | 100 | 400 | 30.5.70 காலை 10 மணி | 50 | — | 50 | 100 | 100 | — | 200 | 400 |
| கலென்பிந்துனுவேவா பி.வி. | 100 | 300 | | 150 | — | 300 | 600 | 400 | — | 800 | 1,600 |
| மொருவேவா பி. பி. | 100 | 300 | | 100 | — | 200 | 400 | 250 | — | 500 | 1,000 |
| இராசாங்கணை பி.வி. | 100 | 300 | | 100 | — | 200 | 400 | 250 | — | 500 | 1,000 |

5–8—8.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கந்தளாய் உபபிரிவு

திருகோணமலைப் பிரிவிலுள்ள கந்தளாய் நீர்ப்பாசன உபபிரிவின் கீழ் உள்ள மணிஅரசன் குளம் புனருத்தாரண வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் திருகோணமலை பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளரினால் 30.5.70 சனிக்கிழமை காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு, உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ஒப்பந்த வேலைகள் செய்வதற்கென ரூபா 95,000 க்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் மட்டுமே இக் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக் கேள்விக்காகிய வெற்றுப் பத்திரங்கள் கந்தளாய், திருகோணமலை, அல்லை ஆகிய இடங்களில் உள்ள நீர்ப்பாசன காரியாலயங்களில் 1970 ம் ஆண்டு வைகாசி மாதம் 26 ந் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 3 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன் வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்பொழுது இத் திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப் பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா வென்றறிய நீர்ப்பாசன பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்கு முன் நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் ரூபா 100 கேள்விக் கட்டணமாகச் செலுத்தப்படவேண்டும். இக் கேள்விக் கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச் சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக் கேள்வியைப் பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் கந்தளாய் நீர்ப்பாசன காரியாலயத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ச. இராஜகுலசிங்கம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கந்தளாய் உபபிரிவு.

கந்தளாய்,
1970 ம் ஆண்டு சித்திரை மாதம் 27 ந் திகதி.

5–47—8.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### யாழ்ப்பாண உபபிரிவு

கிளிநொச்சி நீர்ப்பாசன உபபிரிவிலுள்ள கனகாம்பிகை குளத்தின் கீழ் இடதுகரை பிரதான வாய்க்கால் கட்டுதற்கு கேள்விப்பத்திரங்கள் வவுனியாவிலுள்ள வடபெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 30.5.1970 சனிக்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும் ; அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 45,600 க்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், மட்டுமே இக்கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்சாகிய வெற்றுப்பத்திரங்கள் யாழ்ப்பாணம்/நீர்ப்பாசனப் பிரிவு யாழ்ப்பாணக் கச்சேரி/மன்னார்/வவுனியா/முல்லைத்தீவு/வவுனிக்குளத்திலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் 1970 ம் ஆண்டு வைகாசி மாதம் 26 ந் திகதி பி.ப. 3.00 மணிவரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்பொழுது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப் பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமாவென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் ரூபா 50 கேள்விக் கட்டணமாகச் செலுத்தப்படல் வேண்டும். இக்கேள்விக் கட்டணத்தை ஓர்கச்சேரியில் செலுத்திப் பற்றுச் சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக்கேள்வியைப் பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் கிளிநொச்சியிலுள்ள யாழ்ப்பாண உப பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. சோமசுந்தரம்
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
யாழ்ப்பாண உபபிரிவு.

கிளிநொச்சி,
1970 ம் ஆண்டு சித்திரை மீ 26 ந உ.

5–46—8.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905.

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### கேள்விப்பத்திர அறிவித்தல்

கொழும்பு–5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1970 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி மு. ப. 10.00 மணிவரை, இரும்பு மரத்திருகாணிகளும் பித்தளை மரத்திருகாணிகளும் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

கேள்விகள் முடிவடைவதற்குக் குறித்த திகதிக்கு முந்திய திகதி நண்பகல் 12.00 மணிவரை, எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடியதான பத்திரங்களில் கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்படவேண்டும். கொழும்பு–5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இ. போ. ச. பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கேள்விப் பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 100 ஐக் கட்டி இதன் பற்றுச்சீட்டுக்களை கேள்விப்பத்திரங்கள் வழங்குவதற்காக எனது அலுவலகத்தில் காட்ட வேண்டும்.

மேலதிக விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம வினியோக உத்தியோகத்தர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

வினியோகப் பகுதித் தலைமைக் காரியாலயம்,
200, கிருல வீதி, கொழும்பு–5.

5–52—8.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905

---

எனது இல. பா/4/2/34

## அம்பாறைக் கச்சேரி

கீழ்க்குறிப்பிடும் வேலைகளுக்காக பொதுக் கேள்விப் பகுதி, நீர்ப்பாசன இலாகா, கல்விப் பகுதித் திணைக்களங்களில் அல்லது கச்சேரிகளில் கொந்தருத்துக்காரர்களாக பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், தொழிற்சங்கங்கள், பிரத்தியேகமான கொந்தருத்துக்காரர்களிடமிருந்து 1970 ம் ஆண்டு மே மாதம் 30 ந் திகதி காலை 11.00 மணிவரைக்கும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரால் " சீல் " வைக்கப்பட்ட " ரெண்டர் " பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

(1) சின்னமுகத்துவாரம் வாடிவீட்டுக்கு மண்டபத்தில் கண்ணாடி ஜன்னல் பொருத்துதல்.

(2) அறுகம்பே வாடிவீட்டுக்கு பின்பக்கம் வடிகால் அமைத்தல்.

(3) உகனையிலுள்ள 32 ம் இலக்க அரசாங்க வீட்டை திருத்துதல்.

(4) சம்மாந்துறைக் காரியாதிகாரியின் உத்தியோக வாசஸ்தலத்திற்கு முன்னுக்கு போட்டிக்கோ அமைத்தல்.

(5) சம்மாந்துறை காரியாதிகாரியின் உத்தியோக வாசஸ்தலத்திலிருக்கும் கராஜிக்கு சீமேந்து போடுதல்.

(6) உகனை காரியாதிகாரி காரியாலயத்தில் கராஜொன்று அமைத்தல்.

(7) உகனை யூ. 6/7 வீட்டுக்கு கராஜொன்று அமைத்தல்.

2. இத்தீவில் எக்கச்சேரியிலாவது ஒவ்வொரு வேலைக்குமாக ரூபாய் 10.00 க்கு ரெண்டர் கட்டுப்பணமாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரின் பெயருக்கு கட்டிப்பெற்ற பற்றுச்சீட்டை ஒப்புவித்து அவசிய " ரெண்டர் " பத்திரங்களை அம்பாறை அரசாங்க அதிபர் காரியாலயத்திலுள்ள நிர்வாகப்பகுதியில் பெற்றுக் கொள்ளவும். மேலும் முதலாம் பந்தியில் குறிப்பிட்ட சங்கங்களால் இப்பணம் கட்ட வேண்டியதில்லை. " ரெண்டர் " பத்திரங்கள் பாரமெடுக்கும் கடைசித் திகதிக்கு முன்தினம் பி.ப. 1.00 மணி வரைக்கும் " ரெண்டர் " பத்திரங்கள் கொடுக்கப்படும்.

3. இரு பிரதிகளில் தெளிவாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்களை மாவட்ட அதிபர், அம்பாறை என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். (பதிவுத்தபால் மூலம்) அப்படியில்லாவிடின் அம்பாறை மாவட்ட அதிபர் காரியாலயத்தில் காரியாலய உதவியாளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும் " ரெண்டர் பெட்டியில் " இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அடங்கிய தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் என்ன வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் எனக்குறிப்பிடல் வேண்டும். குறிப்பிட்ட பத்திரங்களில் தெளிவாக எழுதப்படாதிருந்தால் அக்கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. 1970 ம் ஆண்டு மே மாதம் 30 ந் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு அம்பாறை அரசாங்க அதிபர் காரியாலயத்தில் காரியாலய உதவியாளரின் அறையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அப்படிக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் போது அவ்விடத்திற்குக் கேள்விப்பத்திரகாரர் அல்லது அவரது கடிதத்தால் நியமிக்கப்பட்ட அவரின் பிரதிநிதி ஒருவர் சமூகம் கொடுப்பதற்கு இடமளிக்கப்படும்.

5. தேர்ந்தெடுக்கப்படும் கேள்விப்பத்திரகாரருக்கு அதைப்பற்றி அறிவிக்கப்படும் கடிதத்தில் குறிப்பிட்ட திகதியில் இருந்து பதினான்கு நாட்களுக்கு தேவைப்பட்ட கட்டணத்தைச் செலுத்தி வேலையைத் திருப்திகரமாகச் செய்து முடிப்பதற்கு அம்பாறை அரசாங்க அதிபரிடம் ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப் பத்திரகாரர் முழுத்தொகையில் ஐந்து வீதம் பிணைப்பணமாகக் கட்டுதல் வேண்டும்.

ஏற்கனவே செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை மீறினால் அவர் கட்டிய பணத்தை இழப்பதோடு ஒப்பந்தங்களை மீறுபவருக்கான பட்டியலில் அவரின் பெயரும் இடம்பெற நேரிடும்.

6. கடமை தவறிய கொந்தருத்துக்காரர் என்றும் அரசாங்கம் வேறு எந்தக் காரணத்துக்காக வேலையைச் செய்வதற்கு தகுதியற்றவர் என்றும் மாவட்ட அரசாங்க அதிபர் நம்பினால் இவ்வொப்பந்தத்தை ரத்துச் செய்ய இடமுண்டு.

7. கேள்விப்பத்திரங்கள் அனுப்பும் சங்கங்கள் நிரந்தரமானதென்றும் தற்போது கடமை செய்யும் கிராம முன்னேற்ற உபதலைவர், கூட்டுறவுச் சங்க அபிவிருத்தி ஆணையாளர் அல்லது தொழில் உதவி ஆணையாளர்

உட்படச்சார்ந்த உத்தியோகஸ்தர்களிடமிருந்து பெற்ற பத்திரத்தைக் கேள்விப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். குறிப்பிட்ட சங்கம் கொந்தருத்துச் செய்வதற்கு தகுதிவாய்ந்ததென்றும் அந்த உத்தியோகஸ்தரால் சிபார்சு செய்யப்படல் வேண்டும்.

8. ஏதேனும் ஒரு பகுதியை ஏற்கவோ நிராகரிக்கவோ அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு அதிகாரம் உண்டு.

9. பத்திரத்தைப் பெற்றவர்கள் அதை முழுவதாகப் பூர்த்தி செய்து கேள்விப் பத்திரச் சபைக்கு அனுப்பாமல் இருப்பவருக்கும் குறிப்பிட்ட நிபந்தனையை மீறியவர்களுக்கும் குறிப்பிட்ட பத்திரத்தில் அல்லாமல் வேறு பத்திரத்தில் அனுப்பப்படும் கொந்தருத்துச் சொந்தக்காரர் களுக்கும் அவர்கள் கட்டிய பணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

10. இதைப்பற்றிய மேலும் விபரங்கள் அறிய விரும்புவோர் அம்பாறை மாவட்ட கச்சேரிக் காரியாலயத்திலுள்ள நிர்வாகப்பகுதிக் கந்தோரில் கந்தோர் நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

எம். டீ. சீ. கருணசேகர,
மேலதிக அரசாங்க அதிபர்,
அரசாங்க அதிபருக்காக,
அம்பாறை மாவட்டம்.

அம்பாறைக் கச்சேரி,
1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம்

5–72—8.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905.

## பொருட்கள் விற்பனையும் பிறவும்

### விற்பனைத் திணைக்களம்

கொழும்பு–10, டி. ஆர். விஜேவார்தனு மாவத்தையிலுள்ள விற்பனைத் திணைக்களத்தின் போக்குவரத்துப் பகுதியில், 1970 ம் ஆண்டு மே மாதம் 22 ம் தேதி காலை 10.30 மணிக்கு பின்வரும் பாவித்த வாகனங்கள் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும் :

| | பதிவு இலக்கம் | | விபரம் |
|---|---|---|---|
| 1. | சிவி. | 1810 | .. போர்ட்சன் தேம்ஸ் 3 தொன் லொறி |
| 2. | ஈவை. | 2567 | .. ஒஸ்ரின் ஏ 40 கார் |
| 3. | சிவி. | 5235 | .. மொரிஸ் 5 தொன் லொறி |
| 4. | ஈவை. | 5772 | .. மொரிஸ் 3 தொன் லொறி |
| 5. | சிவி. | 1643 | .. போர்ட்சன் தேம்ஸ் 3 தொன் லொறி .. |
| 6. | சிவி. | 2046 | .. மொறிஸ் கொமேசல் 1 தொன் வான் |
| 7. | சிவி. | 2043 | .. மொறிஸ் கொமேசல் 1 தொன் வான் |
| 8. | சிவி. | 2042 | .. மொறிஸ் கொமேசல் 1 தொன் வான் |
| 9. | சிவி. | 2044 | .. மொறிஸ் கொமேசல் 1 தொன் வான். |

வாங்குபவர்கள் முழுத்தொகையையும் ஸ்தலத்திலேயே செலுத்துதல் வேண்டும்.

கொழும்பு–1, பி. எஸ். எஸ். ஐ. கட்டிடத்திலுள்ள விற்பனை அபிவிருத்தி ஆணையாளர் காரியாலயத்தில் முழு விபரங்களும் பெற்றுக் கொள்ளலாம்.

ஆர். எப். சி. டி லிவேரா,
விற்பனை அபிவிருத்தி ஆணையாளருக்காக.

விற்பனைத் திணைக்களம்,
பி. எஸ். எஸ். ஐ. கட்டடம்,
பிறிஸ்டல் வீதி,
கொழும்பு, 30, ஏப்பிரல் 1970.

5–106—8.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,905

## ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

### மன்னர் மாவட்ட கள்ளுத் தவறணை குத்தகை 1.7.70 தொடக்கம் 30.6.71 வரை

இதில் காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் சொல்லப்பட்ட மன்னர் மாவட்டக் கள்ளுத் தவறணைகளில் 1.7.70 தொடக்கம் 30.6.71 வரைக்குமான கால எல்லைவரை சில்லறையாக விற்பனை செய்வதன்பொருட்டு சிறப்புரிமை வழங்குவதற்காக நடைமுறையில் இருந்துவரும் பொது விதிகளுக்கமையவும் 20.3.70 ம் திகதி பிரசுரிக்கப்பட்ட 14,898 இலக்க அரசாங்க வர்த்தமானியில் காணப்படும் கள்ளுத் தவறணை குத்தகை விதிகளுக்கமையவும் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கேள்விப்பத்திரங்கள் " மன்னர் மாவட்டக் கள்ளுத் குத்தகை 1970/71 " என்று குறிப்பிடப்பட்டு, அட்டவணையில் காட்டப்பட்ட நேரத்திற்கு பிந்தாமல் 14.5.70 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ வந்து சேரக்கூடியதாக மன்னர் மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

3. ஒவ்வொரு தவறணைக்கும் தனித்தனிக் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படவேண்டும். எவரும், எந்தவொரு தவறணைக்காவது ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விப்பத்திரங்களை அனுப்புவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். ஐந்துபேருக்கு அதிகமானவர்கள் கூட்டாகச் சேர்ந்து எந்தவொரு தவறணைக்கும் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப முடியாது.

4. கேள்விக்காரர் —

(அ) நேர்முகத்தில் சமுகம் தராவிட்டால் ;

(ஆ) எந்தப் பகுதியில் அவருடைய காணி இருக்கின்றதோ அந்தப் பகுதி காரியாதிகாரியிடம் பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்துடன் கேள்விப்பத்திரம் அணைக்காவிட்டால் ;

(இ) பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்தில் சொல்லப்பட்ட காணியின் பெறுமதி கேள்விப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட தொகையின் 25 வீதத்திற்குக் குறைந்தால்,

அவரது கேள்விப்பத்திரம் கவனத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஒன்றுக்கு மேற்பட்ட தவறணைகளுக்கு கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கும் கேள்விக்காரர், அதேவேளையில் அதே ஆண்டுக்குரிய வேறு தவறணைக்கு கேள்விப்பத்திரத்துடன் பெறுமதி அத்தாட்சிப்பத்திரத்தின் மூலப்பிரதியை அணைத்திருந்தால் அப்பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றை இணைக்கலாம். அத்தகைய ஒவ்வொன்றிலும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பெறுமதிப்பத்திரப் பிரதி, மூலப் பிரதி இணைக்கப்பட்ட தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் கொண்ட குறிப்பை, உள்ளடக்கியிருக்க வேண்டும்).

5. கேள்விப்பத்திரங்களை பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கலாம். அல்லது மன்னர் கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியிலும் போடலாம். ஆனால், கேள்விப்பத்திரம் எந்தத் தவறணைக்குத் தாக்கல் செய்யப்படுகின்றதோ அந்தத் தவறணையின் பெயரும் இலக்கமும் என்வலப்பின் இடதுபக்க மேல்மூலையில் பொறிக்கப்பட்டு, என்வலப்பு சீல்பண்ணப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தனித்தனி என்வலப்பில் வைத்து, மேற்காட்டிய குறிப்புக்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

6. கீழே சொல்லப்பட்ட ஒவ்வொரு தவறணைக்கும் எதிராகவுள்ள வைப்புப் பணத்தைக் கேள்விக்காரர் செலுத்துதல் வேண்டும் :—

(அ) மன்னார் கச்சேரியிலோ அல்லது வேறு எந்தக் கச்சேரியிலாவது வைப்புப் பணத்தைச் செலுத்தலாம். வைப்புப் பணத்திற்குரிய பற்றுச்சீட்டு கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர், விற்பனை நிபந்தனைகளில் உடனடியாகக் கைச்சாத்திடத் தவறினால், அவரது வைப்புப் பணம் பறிமுதல் செய்யப்படும் ;

(இ) தெரிவுசெய்யப்படாத கேள்விக்காரர்களின் வைப்புப்பணம், தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர் திருப்பிக் கொடுக்கப்படும்.

7. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ மன்னார் அரசாங்க அதிபருக்கு மாத்திரம் உரிமையுண்டு.

8. தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர், விற்பனை நிபந்தனையிலும் ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடவும், அரசாங்க அதிபரால் குறிப்பிடப்படும் பிணைப்பணத்தைச் செலுத்தவும் தேவையான முத்திரைகளைக் கொடுப்பதற்கும் தயாராயிருத்தல் வேண்டும்.

9. தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர் குத்தகைக்காரர் என அறிவிக்கப்பட்ட மாத்திரத்தில் தான் எந்த இடத்தைத் தவறணைக்காகத் தெரிவு செய்திருரென்பதை மன்னார் அரசாங்க அதிபருக்கு அறிவித்து அவரிடமிருந்து அதற்கான அனுமதியையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

10. மேற்கொண்டு விபரங்கள் அறியவேண்டுமாயின் மன்னார் கச்சேரிக்கு மனுப்பண்ணிப் பெற்றுக்கொள்ளவும்.

**மேற் கூறப்பட்ட அட்டவணை**

(மன்னார் மாவட்ட கள்ளுத்தவறணைகள் 1.7.70—30.6.71)

| தொடர் இல. | பிரிவு | தவறணைக்காகத் தெரிவுசெய்யப் படும் உள்ளூர் பகுதி | வைப்புப் பணத் தொகை | கேள்விப்பத்திரங்கள் முடிவடையும் நேரமும் தேதியும் |
|---|---|---|---|---|
| 1 | .. மன்னார் | .. மன்னார் | .. 2,000 | .. 14.5.70 மு. ப. 10.00 |
| 2 | .. மன்னார் | .. தலைமன்னார் | .. 1,500 | .. 14.5.70 மு. ப. 10.15 |
| 3 | .. மன்னார் | .. பேசாலை | .. 1,500 | .. 14.5.70 மு. ப. 10.30 |
| 4 | .. மன்னார் | .. உயிலங்குளம் | .. 1,500 | .. 14.5.70 மு. ப. 10.45 |
| 5 | .. மாந்தை | .. கட்டாடிவயல் | .. 500 | .. 14.5.70 மு. ப. 11.00 |
| 6 | .. முசலி | .. வங்காலை | .. 1,000 | .. 14.5.70 மு. ப. 11.15 |
| 7 | .. முசலி | .. அரிப்பு | .. 1,000 | .. 14.5.70 மு. ப. 11.30 |
| 8 | .. மன்னார் | .. மாதுவாடி | .. 1,500 | .. 14.5.70 மு. ப. 11.45 |

மன்னார்க் கச்சேரி,
1970 ம் ஆண்டு ஏப்ரில் மீ 25 ந உ.

ச. கதிர்காமநாதன்,
அரசாங்க அதிபர், மன்னார் மாவட்டம்.

5–35—8.5.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,905

# ஏல விற்பனைகள்

## ஏல விற்பனை

பெறுமதிமிக்க மூன்று வாசஸ்தலங்கள். இவை மின்சார வெளிச்ச வசதிகள் தண்ணீர் சேவை வடிகால் வசதிகள் உடையவை. கொழும்பு, மருதானை, மாளிகாவத்தை ரோட்டில் வரிமதிப்பிலக்கங்கள் 76, 76/27, 76/28 என்பனவற்றைக் கொண்டு 22·27 பேர்ச் விஸ்தீரணத்தில் அமைந்துள்ளன. 76 ம் வரிமதிப்பிலக்க ஸ்தலம் இரண்டு அடுக்கு மாடி பங்களாவைக் கொண்டது. 76/27 மற்றும் 76/28 ஆகிய இரண்டும் இரட்டை வீடுகள், “ றைய் மகால் ” என அழைக்கப்படுபவை.

1966 ம் வருட 36 ம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட தேசிய வீடமைப்புச் சட்டத்தின் (அத்தியாயமான 401 இ. ச. வா.) 76 ம் பிரிவின் விதிகளுக்கமைய விற்பனை செய்யப்படுகிறது.

குறிப்பிலக்கம் LEG/L/414 தேசிய வீடமைப்பு உதவி ஆணையாளர் திரு. தனபால சிரிசேன வீரசிங்க அவர்களால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்திற் கிணங்க கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை, “ றைய் மகால் ” லைச் சேர்ந்த இருவரான திருமதி ஐ. எஸ். றைகனது உம்மா மற்றும் திரு. எஸ். எம். காலிதீன் ஆகியோரிடமிருந்து கொழும்பு பிரசித்தசாசன லேகனரான ஆர். நாகலிங்கமவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 1951 டிசம்பர் 4 ந் திகதியிடப்பட்ட 76 ம் இலக்க ஈட்டு முறியின் பேரில் 4.12.1969 வரை முப்பத்தொன்பதினாயிரத்து நாற்பத்தி நான்கு ரூபா முப்பத்தெட்டு சதத்தையும் (ரூபா 39,044.38) 4.12.1969 முதல் விற்பனைத் திகதி வரை அல்லது முழுத் தொகையும் செலுத்தப்படுவதுவரை தவறுகை ஒன்று புரியப்பட்டதன் பேரில் மேலதிக வட்டியோடு ரூபா 10,500 ரூபாவிற்கு $2\frac{1}{2}\%$ வருட வட்டியும் 4.12.1969 திகதிய ஈட்டு முறியின் பேரில் விற்பனைத் திகதிவரை உள்ள எல்லாக் குற்றப்பணங்களையும் இவ் அறவிடுதலின் நிமித்தம் ஏற்பட்ட செலவினங்களையும் சேர்த்து அறவிடுதற்காக 1970 யூன் மாதம் 3 ம் திகதி பிற்பகல் நாலு மணிக்கு அதே இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்வேன். தெலம்புகஹாவத்தை அல்லது தெலம்புகஹா ஓவிற்ற என்றும் அழைக்கப்படும் காணியில் மாளிகாவத்தை ரோட்டில் 76 ம் வரிமதிப்பிலக்கத்தைக் கொண்ட பீ 1 துண்டு முழுவதும் அங்குள்ள கட்டடங்களுடன் இதற்கு எல்லைகளாக வடக்கில் துண்டு பீ 6 இன் ரோட்டு ஒதுக்கற் காணியும், கிழக்கில் பீ 2 துண்டுக்காணியும், தெற்கில் பெரேராவிற்கும் ஏனையோருக்கும் சொந்தமான காணியும், மேற்கில் மாளிகாவத்தை ரோட்டும் அமைந்துள்ளன. அனுமதிபெற்ற நில அளவையாளர் கே. ஜி. டபிள்யு. சில்வா அவர்களால் 1942 மே 23 ம் திகதியிற் தயாரிக்கப்பட்ட 324 ம் இலக்க நில அளவை வரைபடத்தில் விவரிக்கப்பட்டபடி இருபத்திரண்டு தசம் இரண்டு ஏழு பேர்ச் (0 ஏ., 0 றூ., 22·27 பேர்ச்.) விஸ்தீரணங் கொண்டது. தவறுதலாக ஒரு றூட் மூன்று தசம் நாலு இரண்டு பேர்ச் (0 ஏ., 1 றூ., 3·42 பே.) விஸ்தீரணமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கொழும்பு மாவட்ட காணிப்பதிவகத்தில் ஏ 285/291 ம் இலக்க சொத்துரிமையின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஒப்பினை பார்வையிடுதற்கும் ஏனைய விபரங்களுக்கும் தேசிய வீடமைப்பு ஆணையாளர் தேசிய வீடமைப்புப் பகுதி சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தை, கொழும்பு 2 என்ற விலாசத்திற்கு ; அல்லது

எல். எம். நிக்கொலி, ஏலவிற்பனையாளர், தரகர், விலை மதிப்பாளர் நிர். 7, பெல்மண்ட் வீதி, ஹல்ட்ஸ்டோர்ப், கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு மனுச்செய்க. எல். எம். நிக்கொலி ஏலவிற்பனையாளர், தரகர், விலைமதிப்பாளர்.

எல். எம். நிக்கொலி,
ஏல விற்பனையாளர்.

5–33—8.5.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,905.

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

**1.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது**

# "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)"

## வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு.ப. 9 மணி முதல் பி.ப. 1 மணி வரையும், மற்றும் நாட்களில் மு.ப. 9 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி.ப. 3.30 மணிக்கும் பணம் **கொடுக்கல் வாங்கல்** முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப்** அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறெக்ரறுல் " கையொப்பமிடப் பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு : —

| | | | | ரூ. ச. |
|---|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | .. | .. | .. | 20 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | | .. | .. | 20 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | .. | .. | .. | 220 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | | .. | .. | 440 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப் பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம்** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| **அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு)** | | | | **உள்ளூர்** | | **வெளியூர்** |
|---|---|---|---|---|---|---|
| | | | | ரூ. ச. | | ரூ. ச. |
| ஒவ்வொரு பகுதியும் | .. | .. | .. | 46 0 | .. | 60 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு | .. | .. | .. | 36 0 | .. | 42 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் | | .. | .. | 43 50 | .. | 51 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும் ,வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | | | விலை<br>ரூ. ச. | | தபாற் செலவு<br>(உள்ளூர்)<br>சதம் |
|---|---|---|---|---|---|
| (அ) | (i) | வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 | .. | 20 |
| | (ii) | வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. . .. | 1 0 | .. | 20 |
| (ஆ) | (i) | வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 30 | .. | 15 |
| | (ii) | வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 | .. | 15 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும் வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

### அட்டவணை—1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஏப்பிறல் | 3.4.70 | வெள்ளி | 25.3.70 | புதன் | பி. ப. 3.30 |
| | 10.4.70 | வெள்ளி | 3.4.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 17.4.70 | வெள்ளி | 8.4.70 | புதன் | பி. ப. 3.30 |
| | 24.4.70 | வெள்ளி | 17.4.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 30.4.70 | வியாழன் | 23.4.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| மே | 8.5.70 | வெள்ளி | 30.4.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 15.5.70 | வெள்ளி | 8.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 22.5.70 | வெள்ளி | 15.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 29.5.70 | வெள்ளி | 22.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| யூன் | 5.6.70 | வெள்ளி | 29.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 11.6.70 | வியாழன் | 5.6.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 18.6.70 | வியாழன் | 11.6.70 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 25.6.70 | வியாழன் | 18.6.70 | வியாழன் | ந. ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகன்.*

அரசாங்க அச்சகப் பகுதி, கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மாச்சு மீ 5 ஆந் உ.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.